# "குரு" - யார்?



ஒரு சமய ஆராய்ச்சி நூல்

ஆசிரியர்

சாது செல்லப்பா

# "குரு" - யார்?

ஆசிரியர்
**சாது செல்லப்பா**

**அக்னி பப்ளிகேஷன்ஸ்**
P.O. Box No. : 8659
சென்னை—41.

உரிமை ஆசிரியருக்கு
முதல் பதிப்பு 1995
இரண்டாம் பதிப்பு 1997
மூன்றாம் பதிப்பு 2001
நான்காம் பதிப்பு 2009

**அக்னி பப்ளிகேஷன்ஸ்**
P.O. Box No. : 8659
சென்னை–41.

அச்சிட்டோர் :
**கதிரவன் ஆப்செட் அச்சகம்**
91, மருந்தீசுவரர் நகர்,
திருவான்மியூர், சென்னை–600041.
தொ.பே. 24523801

# முன்னுரை

இந்தியாவில் நெடுங்காலமாக 'குரு'க்கள் இருந்து வந்திருக்கிறார்கள். இந்நாட்களில் எங்கு பார்த்தாலும், எல்லா மதங்களிலும் 'குரு'க்கள் இருக்கிறார்கள். இளையோரும், முதியோரும், ஏழைகளும், பணக்காரர்களும், படித்தவரும், படிக்காதவர்களும் எவ்வித வித்தியாசமுமின்றிக் 'குரு'வைச் சேவித்து மரியாதை காட்டி வருகிறார்கள்.

இவ்வுலகத்தைப் பற்றியோ, அதைப் படைத்த ஆண்டவரைப் பற்றியோ அறிவது இயலாத காரியம் என்பவர்களையும் கூடக் 'குரு' வணக்கம் பிரம்மிப்புக்குள்ளாக்கு கின்றது. சமூக சேவையாளர்களை ஆச்சரியப்பட வைக்கிறது. மூளை நிபுணர்களைத் தூண்டி, ஆராய வைக்கிறது. தத்துவ ரீதியாகவும், மத சம்பந்தமான காரியங்களிலும், நாகரீகத்தின் போக்கிலும் 'குரு'மார்கள் செய்த காரியங்கள், செய்து வருகின்ற காரியங்கள் உலகத்தை மிகவும் கவர்ந்துள்ளது என்றால் மிகையாகாது.

குருத்துவம் இல்லாமையால் உண்மையான நாகரீகம் அழிந்துவிட்டதை இந்தியாவில் மட்டுமல்ல, வெளிநாடுகளிலும் மக்கள் உணருகிறார்கள். பண்டைக் காலத்தில் மாணாக்கர்கள் குருவுக்குக் கீழ்ப்படிந்து தாழ்மை, அடக்கம், மரியாதை, நற்பண்புகள். நல்லொழுக்கம் அன்பு போன்றவைகளைக் கற்று வந்தனர். ஆதலால் மக்களிடையே நல்லுணர்வும், பொதுநல சேவையும், மிகுந்து காணப்பட்டன. இக்காலங்களில் 'குரு' என்றாலே பரிகாசம் செய்யும் 'நாகரீகப் பண்புகள்' வளர்ந்து மேலோங்கி விட்டதால் அடக்கமின்மையும், தீயகுணங்களும் மேலோங்கி நிற்கின்றன.

என்றாலும், சிவானந்தர் போன்ற 'குருக்கள்' தங்களையே தத்தம் செய்து ஆத்மீக மனிதனின் வாழ்க்கையில் தெய்வீகப்

பேரானந்தத்தை ஏற்படுத்துவதற்குச் செய்த முயற்சிகள் அனேக மக்களின் உள்ளங்களை ஊடுருவாமலில்லை. கிருஷ்ணானந்தர் அவர்கள் 1960-ம் ஆண்டு அலகாபாத் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய மூன்று நாள் சொற்பொழிவுகளுக்கும் "நற்பண்புகளுக்கு எழுப்புதல்" என்ற தலைப்பைக் கொடுத்துப் பேசியதிலிருந்து இந்தியா, குருத்துவம் இல்லாமையினால் எவ்வளவு கீழ்த்தரமான நாகரீகத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம்.

மேற்கு நாடுகளில் கடந்த சில நூற்றாண்டுகளில் சிறந்த கொள்கைகளையுடைய மூன்று வலிமையுள்ள கூட்டங்கள் எவ்வாறு அதன் நாகரீகத்தை வளரச் செய்தன என்பதை யாவரும் அறிவர். கத்தோலிக்க மதக்கொள்கைகள், புரட்டஸ்டண்டு சீர்திருத்த வாதிகள், மனிதாபிமான அறிவுச் சுடர்களைப் பெற்ற அறிஞர்கள் ஆகியோர்களின் உதவியால் மேற்கு நாடுகள் நாகரீகத்தில் மிகவும் முன்னேற்றமடைந்தன. ஆயினும் நிறவெறிக் கொள்கைகள் கிறிஸ்தவர்களுக்குள்ளும் இருந்தபடியினால் மேற்கத்திய நாடுகளின் நாகரீகம் சிதைந்து, இன்று சீர்கெட்டு வருகின்றன. விஞ்ஞானமும், பால் உணர்வும் அதிகரித்து, மனிதாபிமான நற்பண்புகளைக் கெடுத்துவிட்டன. மனிதாபிமானத்தை எதிர்க்கும் அளவிற்கு மனிதன் இயந்திர வாழ்க்கையை நடத்தப் போதிக்கப்படுகிறான். இது வெகுவாக இளைஞர்களைக் குறிப்பாக மாணாக்கர்களைப் பிடித்துக் கொண்டது. மாணவன் குடிக்கவும், 'ஹிப்பி' போல இருக்கவும். மருந்துகளுக்கும் போதைப் பொருளுக்கும் அடிமையாக இருக்கவும் விரும்புகிறான். இந்நிலையில், மகேஷ்யோகி, சுவாமி பிரபு பாதா போன்றவர்கள் குருத்துவத்தின் மூலமாக எப்படி நற்பண்புகளை வளர்த்துக் கொள்ள முடியும் என்பதைக் குறித்து ஆற்றிய சொற்பொழிவுகள், உண்மையாகவே இறைப் பேரின்பத்தை நாடும் மக்களைக் கவர்ந்து கொண்டதில் வியப்பில்லை அல்லவா? ஆரம்பத்தில் 40 மாணவர்களைக்

கொண்ட மகேஷ்யோகிக்கு இன்று அமெரிக்காவில் **73,000** மாணாக்கர்கள் இருப்பது ஏன்? மெய்யான பேரின்பத்தைக் காட்டக் கிறிஸ்தவம் தவறிவிட்டதாலா? அல்லது மகேஷ்யோகியிடம் உள்ள வல்லமையாலா? 1965ல் சென்ற சுவாமி பிரபுபாதாவுக்கு இன்று அமெரிக்காவில் 'ஹரே கிருஷ்ணா' ஆதரவாளர்கள் அதிகரிக்கக் காரணம் என்ன? சிற்றின்பத்திலும், மருந்துப் போதையிலும் ஈடுபட்டவர்கள் இன்று, இந்தியாவில் இருந்து சென்ற இந்துக் குருமார்களிடம் என்ன கண்டார்கள்? மதங்களில் ஒன்றுமில்லையென்று மருந்துப் போதைக்கும் ஹிப்பி வாழ்க்கைக்கும் ஓடினவர்கள் இன்று 'குரு'மார்களின் வழி நடத்துதலுக்குக் கீழ்ப்படிந்து நடக்க முன் வருவது ஏன்? மதச் சார்பற்றவர்களும், நியாயவாதிகளும் கூட 'குரு'வின் வழி நடத்துதலை ஆதரிக்கிறார்களே? இந்த நிலை ஏன் ஏற்படுகிறது?

ஒரு குரு தங்களுடைய ஆத்மீக, சரீர சுக வாழ்விற்கு வழிகாட்ட முடியுமென்றால் அப்படிப்பட்ட குரு யார்? மனித நாகரீகம் தோன்றிய காலத்திலேயே, பிருக தாரண்யக உபநிஷத்திலே கூறியபடி.

"அஸத்வமா ஸத் கமய:
தமஸ்வமா ஜோதிர் கமய:
மிருத்யோமா அம்ருதம் கமய"

"இறைவனே, சத்தியமல்லாததிலிருந்து என்னை
சத்தியத்திற்குள் வழி நடத்தும்
இறைவனே, இருளில் இருந்து என்னை ஒளிக்குள்
வழிநடத்தும்
இறைவனே, மரணத்திலிருந்து என்னை
ஜீவனுக்குள் வழி நடத்தும்"

என்று மனிதன் கதற ஆரம்பித்தான்.

"உலக சரித்திரத்தின் ஆரம்பத்திலிருந்தே மனிதகுலம் இறைவனைத் தேட ஆரம்பித்ததையும், இறைவனின் வழி

நடத்துதலுக்கும் இறைவனின் பாதுகாப்பிற்கும் ஏங்கி நிற்பதையும் பழம் பாடல்களின் மூலமாக அறிகின்றோம். தங்கள் பாவங்கள் இறைவனால் மன்னிக்கப்படவேண்டும் என்றும் நித்ய ஜீவனையடைய வேண்டும் என்றும் அவர்கள் விரும்பினார்கள். இவ்விறைப் பற்று ஆரம்பத்திலிருந்தே மனித உள்ளங்களில் பூரணமாக நிரம்பியிருந்ததற்குப் போதிய அத்தாட்சிகள் பழமையான நூல்களில் மலிந்துகிடப்பதை அறியலாம்.

ஆனால் காலப்போக்கில் 'பகுத்தறிவு' என்ற பெயரில் இத் தெய்வீக அறிவும் குருத்துவ வாழ்க்கையும் அழிந்து போன வரலாற்றையும், நாம் காண்கிறோம். என்றாலும் ஒரு சிலர் இறை நம்பிக்கையையும், குருத்துவத்தையும் மறந்து விடவில்லை. இக்குருத்துவத்தைக் குறித்ததான ஒருசில குறிப்புகளை நாம் அறிந்து கொள்வோமானால் மெய்யான குரு யார்? என்பதையும் அறிந்து கொள்வது இலகுவாயிருக்கும்.

சொல் இலக்கணப்படி 'கு' என்றால் பாவம், அஞ்ஞானம், நோய், இருள், மாயை போன்ற தன்மைகளையும், 'ரு' என்றால் அழித்தல், விடுவித்தல், அகற்றுதல், வழிகாட்டுதல் போன்ற பொருளையும் உடையதாகும். வேதங்களிலும், வேதகாலத்திலும் 'குரு' என்ற பதமோ, குருவோ இருந்ததாகத் தெரியவில்லை. வேத காலங்கள் யாவும் பலி செலுத்துதலையே தலையாய கொள்கையாக உடையனவாக இருந்தன. வேதங்களுக்கு உபநிடதங்கள் எழுதப்பட்ட காலத்தில், 'பலி'' என்ற பதம் 'ஞானம்' என்று திருத்தப்பட்டு ஞானத்தைப் போதிக்கக் 'குரு' அவசியம் என்று 'குருத்துவ' முறை ஆரம்பிக்கப்பட்டது. கி.பி. 300ல் ஆரம்பிக்கப்பட்ட, பவுராணிகம், தந்திரம், போன்ற மதங்கள் 'குரு' என்பதற்குப் புதிய பொருள்களைக் கொடுத்தன. புதிய கொள்கைகளை உண்டு பண்ணி அதன் மூலமாகப் புதிய மதங்களை உண்டு பண்ணுகிறவர்களும், அக்கொள்கை களைப் பரப்புகிறவர்களும் கூடக் 'குரு' என்று அழைக்கப்பட்டார்கள்.

"பவுராணிகர்கள் காலத்தில் குருத்துவம் என்பது போதிப்பதைக் காட்டிலும் பரப்புவதற்கே முக்கிய வார்த்தையாகக் கொள்ளப்பட்டது. 'தந்திரா' கொள்கைக் காரர்களுக்கோ மந்திரத்தை ஓதுபவர்கள் 'குரு' என்று காணப்பட்டது." (Dr. P.B. Chaubey, The nature of Guruship According to Hindu Scriptures : quoted from The World of Gurus)

அக்காலத்தில் 'குரு'வாக இருப்பவர்கள் திருமணமாகிப் பிள்ளைகளையுடையவர்களாக இருக்க வேண்டும் என்ற நியமம் இருந்தது. உபநிடத காலத்தில் ஆச்சார்ய குரு சூத்திரர்களைத் தவிர மற்ற யாவருக்கும் போதித்தார்கள். 'தந்திரா'க்காரர்கள் தங்களுடைய இனத்தாருக்கு மட்டுமே போதித்தார்கள். இதினிமித்தமாக எந்தக் குரு சிறந்தவர் என்ற போட்டி மனப்பான்மை ஏற்பட்டது.

கி.பி. 1440-1518-ம் ஆண்டு காலத்தில் சான்ட்கபீர் என்ற இஸ்லாமியர், (சாதாரண நெசவாளியாக இருந்தவர்) குருவாக உயர்ந்தார். இஸ்லாமிய 'சூபி'களும் இந்திய குருமார்களும் கூட இவரை ஆதரித்தனர். இதனால் இவர் விக்கிரக ஆராதனையையும்,அவதாரக் கொள்கைகளையும் தள்ளி தெய்வத்தின் இடத்தை 'குரு'வுக்கு அளித்தார். இவரது காலத்தில் வாழ்ந்த குரு நானக் (கி.பி. 1469 - 1538) என்பவர். கபீர் அவர்களின் கொள்கைகளைச் சில மாறுதல்களுடன் 'சீக்கிஸம்' என்ற புதுக்கூட்டத்தை ஏற்படுத்தினார். குருவுக்கு விசேஷித்த மரியாதையையும் பயபக்தியையும் கொடுக்க வேண்டும் என்று இவர் வற்புறுத்தினார்.

தேவ பக்தியுள்ளவர்களுக்குக் 'குரு' எவ்வளவு முக்கியமானவர் என்பதை சீக்கியம் தான் கொண்டு வந்தது எனலாம். சீக்கியம் இறைவனைச் சொல்லுக் கடங்காத பூரணர் என்றும், உருவமற்றவர் என்றும், குரு என்றும், வழிபடத் தகுந்த காரணர் என்றும், ஒளியை வெளிப்படுத்துகிறவர் என்றும் கூறியது. மனிதனாகிய நானக் அவர்களையும் அவரது

பின்னோடிகளான ஒன்பது பேர்களையும் கூட சீக்கியம் 'குரு' என அழைத்தது. பத்தாவது மனிதராகிய கோவிந்த சிங்கும் குருவென அழைக்கப்பட்டார். ஆனால் அவருக்குப் பின்பு தகுந்த மனிதர்கள் காணப்படாமையினால் அவர் 'ஆதி' கிரந்தம், என்ற நூலையே சீக்கியர்களுக்குக் 'குரு' வாக அமைத்து, ஐந்து பேர்கள் கொண்ட குழுவை வழிகாட்டியாக வைத்தார். 'குரு' என்ற பதத்திற்குப் பல பொருள்கள் இருந்தது இவர்களைக் குழப்பத்திற்குள் ஆழ்த்தியது. 'குரு' என்ற பதம் இறைவனைக் குறிக்குமானால் மனிதர்களைக் குரு என்று அழைக்கலாமா? இதற்குச் சீக்கிய இறைவிற்பன்னர்கள் "மனிதர்கள். அல்ல, அவர்கள் வாயிலிருந்து வரும் 'வார்த்தை' தான் குரு" என்று விளக்கம் கொடுத்தார்கள். ஏனெனில் இவர்கள் தெய்வீகத்துடன் இணைந்து விடுகிறார்களாம். (Post G.S. Talib, the concept of Gurushis in the sikh Tradition An unpublished paper presented at the Christian Institute of Sikh Studies Batala : quoted from World of Gurus) அப்படியானால் இறைவனுடன் இணைந்து வாழ்கின்ற அனைத்து மக்களையும் ஏன் 'குரு' என்று அழைக்கக் கூடாது? ஏன் 10 பேர்களை மட்டும் 'குரு' என்று அழைக்க வேண்டும்? என்ற கேள்விக்கு இது வரை சீக்கியர்கள் தகுந்த பதிலைக் கொடுக்கவில்லை. பிற்காலங்களில் சீக்கியர்களுக்குள்ளும் பல பிரிவுகள் ஏற்பட்டுக் 'குரு'த்துவத்தில் அனேகக் குழப்பங்களை ஏற்படுத்தியது. ஸத் சங்கத்தைச் சேர்ந்த ராதாஸ்வாமி என்பவர், "குரு என்பவர் மனிதனாகவும் இருக்கக் கூடியவர். மனித அவதாரத்தில் பரம் பொருளைக் குறித்த சகல ஞானத்திலும் அவர் இருக்கிறபடியினால் அவரே இறைவன்" என்றார். இது மனித புத்திக்கும் நம்பிக்கைக்கும் மிகவும் பொருத்தமானதாக இருந்தபடியினால் அனேகரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பிற்காலத்தில் 'அகம் பிரம்மம்' என்ற கொள்கைக்கும் இதுவே வித்தாக அமைந்தது. இதன் காரணமாக நீல்காந்தி, தாத்தாஜி, ஆச்சார்ய ரஜ்னீஷ், சத்ய சாயிபாபா போன்றவர்கள் 'பகவான்' என்ற பெயரைத் தங்கள் பெயருக்கு முன்பு வைத்துக்

கொண்டார்கள். இன்னும் இப்படித் தங்களை அழைத்துக் கொள்பவர்கள் அனேகம் தோன்றலாம். கி.பி. 1469-ல் பிறந்த குரு நானக் அவர்களுக்கும் கி.பி. 1931-ல் பிறந்த பகவான் ரஜனிஷ் அவர்களுக்கும் இடையே ஐந்து நூற்றாண்டுகள் கடந்துவிட்டதை இங்கு நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். இக்காலங்களில் குருத்துவம் என்பது இஸ்லாமியலராலும், கிறிஸ்துவர்களாலும், மறுமலர்ச்சி பெற்ற இந்துக்களாலும் பல நிலைமைகளில் நிழலிடப்பட்டது. பிற்காலத்தில் இந்துமதத்தில் உள்ள வைணவர்களும் சைவர்களும் குருவை மதித்தார்கள். ஆனால் குருவை தெய்வத்துடன் ஒப்பிடவில்லை. இஸ்லாமும் கிறிஸ்தவமும் கூட மனிதனைக் குரு என்று அழைப்பதை ஆதரிக்கவில்லை. பிரம்மசமாஜமும் பிரார்த்தனா சமாஜமும்ஆரிய சமாஜமும் மனிதனை வணங்கும் முறையையும், சிலையை வணங்கும் முறையையும் வெறுத்தன. தேவ சாமாஜம் குரு வணக்கத்தை ஆதரித்தாலும் குருவைத் தெய்வத்துடன் ஒப்பிடவில்லை. விவேகானந்தரும் அவருடைய சீடர்களும் இராமகிருஷ்ண பரமஹம்ஸரைக் குருவாக வணங்கினார்கள். நமது நாட்களில் இருந்த அரவிந்தர், மகாத்மாகாந்தி, டாக்டர் இராதாகிருஷ்ணன், கிருஷ்ணமூர்த்தி போன்ற மதத் தலைவர்கள் குரு வணக்கத்தைப் போதிக்கவில்லை. எனினும் தெய்வீக சத்தியத்துடன் இணைந்தவன் தெய்வ மனிதனாகிறான். ஒவ்வொரு கூட்டத்தாரும் தங்கள் தலைவனையே குருவாக எண்ணுகின்றனர். ஒருவரும் பொய்யரல்ல. ஒருவரும் மெய்யருமல்ல என்றாலும், குருவைக் குறித்து முற்காலத்தில் மூன்று விதமான கோட்பாடுகள் இருந்தன என்பதை அறிய வேண்டும்.

1. இறைவனையே குரு. பிரம்மனே ஸத்குரு (சுவாமி சிவானந்தா Bliss Divine 1974 (202-203)

2. குரு இறைவனைப் போல. உண்மையான குரு இறைவனைப் போல இருக்கிறான். ஆனால் அவன் இறைவன் அல்ல. (Ibid 41-42)

3. குரு இறைவனின் மாசற்ற அன்பினை வெளிப்படுத்தும் மத்தியஸ்தன் (பிரபுபாதா Chanting Hare Krishna - Iskcon-5)

எனவே குருத்துவம் என்பது இந்தியாவின் ஆதி காலத்து மக்களின் வாழ்க்கையில் அடங்கிய ஒன்றாகும். இந்தியாவின் பழம் பெரும் தெய்வீகச் சுவடிகள், 'குரு' என்பவரைக் குறித்து மிகவும் தெளிவாகவும், பொருள் நயத்துடனும் வெளிப்படுத்தியுள்ளன. குரு யார்? என்ற கேள்வியை என் சிறு வயது முதல் கேட்டு வந்திருக்கின்றேன்.

பின்வரும் ஆராய்ச்சிக் கட்டுரைகளுக்குச் சான்றாக குரு கீதையையும், தமிழ் சித்தர்கள் பாடல்களையும், சிவஞான போதத்தையும், World of Gurus என்ற புத்தகத்தை யும் பைபிளையும் உபயோகப்படுத்தியுள்ளேன். கவனமாக வாசித்துப் பயனடையுங்கள்.

இந்த நூலில் கையாளப்பட்டுள்ள குரு கீதையின் பாடல்கள். குருபகவான் ஆனந்தகிரி என்று அழைக்கப்பட்ட வரால், சென்னை இராமகிருஷ்ண மாணவரில்லத்தின் பழைய மாணவர் ஸ்ரீ நரசையா, அவர்களுக்கு கொடுக்கப்பட்ட கையெழுத்துப் பிரதியின் நகல்களாகும்.

ரிஷிகேசம் சிவானந்த ஆசிரமத்தார் வெளியிட்டிருக்கும் ஆங்கில மொழி பெயர்ப்புடன் கூடிய குரு கீதைக்கும் பம்பாய், கிரிகாம், பிக்காஜீதவலே வெளியிட்டிருக்கும் மராத்தி உரையுடன் கூடிய குரு கீதைக்கும் ஆங்காங்கு ஒரு சில பேதங்கள் காணப்பட்டாலும் ஒன்றுக்கொன்று கருத்து வேற்றுமை கொண்டது அல்ல. சமஸ்கிருத வாக்கியங்களை அப்படியே தமிழில் எழுதி அதற்குப் பொழிப்புரையும் கொடுக்கப்பட்டு உள்ளது. மயிலாப்பூர் இராமகிருஷ்ண மடத்தினரால் வெளியிடப்பட்ட குரு கீதைக்கு என் நன்றி. என் வாழ்க்கைப் பாதையை மாற்றியமைத்து மெய்யான குருவைத் தேட

வைத்தது இந்தக் குரு கீதைதான். ஸத்குருவாகிய இயேசுக்கிறிஸ்துவின் அருள் உங்களுக்குக் கிடைக்க வேண்டிக் கொள்ளுகிறேன்.

'குரு' வைப் பற்றி இன்னும் விரிவாக எழுதலாம். நாட்கள் நீடிக்குமானால் எழுதுவேன். இதன் உட்கருத்து உங்களுக்கு எப்படிப்பட்டாலும் எனக்கு எழுதுங்கள், வரவேற்கிறேன். தவறு இருப்பின் சுட்டிக்காட்டுங்கள், திருத்திக் கொள்கிறேன்.

என் வாழ்க்கையில் வேதங்களின் அடிப்படையில் மெய்யான தேவனைக் காண முடியாமல் நாத்திகனாக அலைந்ததுண்டு, பணம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு 'தொண்டு' செய்த துண்டு. முடிவில், ஆண்டவரும் இரட்சகருமான இயேசுக் கிறிஸ்துவையே எனது குருவாக ஏற்றுக் கொண்டு கிறிஸ்துவனாக சாட்சி கூறி வருகிறேன். நான் இயேசுக் கிறிஸ்துவைக் குருவாக ஏற்றுக் கொண்டதற்கு மூன்று காரணங்கள் உண்டு.

1. இயேசுக்கிறிஸ்துவின் உபதேசங்கள் அறிவுக்கும் ஆத்மீகத்திற்கும் ஏற்றவைகளாகக் காணப்படுகின்றன. அவர் கொடுக்கும் விளக்கங்கள் யாவும் நம்மைச் சுற்றியுள்ள காரியங்களைக் கொண்டேயிருக்கின்றன.

2. கடந்த 35 ஆண்டு காலக் கிறிஸ்தவ வாழ்க்கையில், இயேசுக் கிறிஸ்து ஒருவரே என்னை வழி நடத்துகின்ற குருவாக என் அனுபவத்தில் காணப்படுகின்றார். அவர் குருவாக மட்டுமல்ல, நண்பனாகவும், வழிகாட்டியாகவும் ஆறுதல் தருகிறவராகவும், பாதுகாக்கிறவராகவும், சகலவற்றையும் அருளுபவராகவும், எனக்குள் வாழ்பவராகவும், எந்த நேரத்திலும் என் உதவிக்கும், மகிழ்ச்சிக்கும், அமைதிக்கும், வல்லமைக்கும் என்னால் அணுகக்கூடியவராகவும் இருக்கின்றார்.

3. இந்த இயேசு கிறிஸ்து ஒருவரே என் ஆன்மீகத்தையும் என் வாழ்க்கையையும் முழுவதுமாக நிரப்பக்

கூடியவராக இருக்கிறார். இதைக் குறித்து என் சாட்சியை எழுதுவேனானால் அது ஒரு தனி நூலாக அமையும். சுருங்கச் சொன்னால் மிருகமாக வாழ்ந்த என்னை ஆன்மீக மனிதனாக மாற்றியவர் இந்த இயேசுக் கிறிஸ்துவே. இவரே என் குரு!

குரு யார்? என்ற இந்தச் சிறிய விளக்க நூல், என் ஆராய்ச்சியின் மூலமாக எழுதப்பட்டதாகும். குரு கீதை என்ற நூலில் ஒரு சில பாடல்களை மட்டுமே பயன்படுத்தியுள்ளேன். எல்லாப் பாடல்களையும் பயன்படுத்தினால் இன்னும் அருமையாக அமையும். திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களின் சொற்பொழிவும் கூட இதில் இடம் பெற்றுள்ளது. மெய்யான குரு யார்? என்பதை நீங்களும் புரிந்து கொண்டு அந்தக் 'குரு' காட்டும் ஞானபாதையில் சென்று மோட்சம் அடைய பிரார்த்திக்கிறேன்.

"யதங்க்ரி - கமலத் வந்த்வம்
த்வந்த் வதாப - நிவார்கம்
தாரகம் பவஸிந்தோச்ச
ஸ்ரீ குரும் ப்ரணமாம் யஹம்"

(குரு கதை 1:16)

எவருடைய பாத கமலங்களிரண்டும் துவந்துவத்தால் ஏற்பட்ட துன்பத்தை நிவாரணம் செய்யுமோ, பிறவிக் கடலையும் தாண்டுவிக்குமோ அந்த ஸ்ரீ குருவை நான் வணங்குகிறேன்.

இனி தொடர்ந்து நீங்கள் படியுங்கள். இறைவனின் திருவருள் எல்லாம் வல்ல இயேசுக் கிறிஸ்துவின் மூலமாக உங்களுக்குச் சித்திப்பதாக.

அன்புடன்
இறைவனின் பணியில்
**சாது செல்லப்பா**

# 'குரு' - யார்?

"யஸ்ய தேவே பராபக்திர்
யதா தேவே ததா குரௌ
தஸ்யைதே கதிதாஹ்யார்த்தா :
ப்ரகாசந்தே மஹாத்மன :"

எவருக்கு தெய்வத்திடம் பக்தி உளதோ, தெய்வத்திடம் போலவே குருவிடமும் பக்தி உளதோ அந்த மஹாத்மாவிற்கு உபநிஷதங்களில் கூறப்பட்ட பொருள்கள் தாமாகவே பிரகாசிக்கின்றன.

(சுவேதாசுவதர உப நிஷத்து)

குருபக்தியால் வாழ்க்கைப் பயனைக் குறைவின்றி அடையலாம். குரு பக்தி உள்ளவனுக்கு சாஸ்திரங்களைப் படிக்காமலேயே ஞானம் சித்திக்கும் என்பதற்கு சாந்தோக்ய உபநிஷதம் ஸத்யகாமனுடைய கதையைக் கூறுகிறது. ஜெபம், தபம், விரதம், தீர்த்தம், யாகம், தானம் ஆகிய அனைத்தும் குரு தத்துவத்தை அறியாதவனிடத்துப் பயனளிக்க மாட்டா என்றும் குருபுத்தியல்லாது ஆன்மாவிற்கு வேறு எதுவும் சாத்தியமாகாது என்பதையும் அறிய வேண்டும்.

"மாதா, பிதா, குரு, தெய்வம்" என்று சாதாரணமாகக் கூறுவர். தெய்வத்தை அணுக, முதலாவது மாதா, பின்பு பிதா, பின்பு குரு என்று குருவை மூன்றாவது இடத்தில் வைக்கிறார்கள். ஒரு சிலர் மாதாவும், பிதாவும், குருவும் தெய்வம் தான் என்றும் கூறுவர். இரண்டாவது கூற்றே எனக்கு நன்மையாகப் படுகின்றது. குருதான் தெய்வமாக இருக்க வேண்டும். அல்லது தெய்வம் தான் குருவாக வரவேண்டும். ஏனெனில் குரு தெய்வத்திற்கும் மனிதனுக்கும் ஒரு பாலமாக இருக்கிறார். இதைக் குறித்த ஒரு நல்ல விளக்கத்தைத் தருகிறேன். இந்த விளக்கம் திரு. கிருபானந்த வாரியார் அவர்களின் 70-ம் ஆண்டு

நிறைவு பவள விழாவில் ஆற்றிய சொற்பொழிவின் ஒரு பகுதியாகும். தின மலர் 6-9-76-ல் பக்கம் 5-ல் காணப்படுகிறது.

"ஆண்டவன் கருணை யாண்டும் நீக்கமற நிறைந்து இருக்கின்றது. இந்த இடத்தில் இறைவனின் கருணை இல்லை என்று கூற முடியாதபடி எங்கும் பரந்தும் விரிந்தும் இருக்கிறது. அக்கருணையைப் பெற வேண்டுமானால் ஆச்சாரியார் (குரு) மூலமாகத்தான் பெற வேண்டும். 120 டிகிரி வெயிலில் வேட்டியை வைத்தால் சுடுமே தவிற எரிந்து போகாது. ஆனால் ஒரு சூரிய காந்தக் கண்ணாடியை வேட்டிக்கும் சூரியனுக்கும் நடுவே பிடித்தால், கண்ணாடியின் கீழ் வருகிற சூரியனின் வெயிலில் வேட்டி தீப்பிடித்துக் கொள்ளும். வெயிலுக்கு வேட்டியைக் கொளுத்தும் ஆற்றல் கிடையாது. ஆனால் கண்ணாடிக்குக் கீழ் வருகின்ற வெயில் வேட்டியைத் தகனம் செய்து விடுகிறதே! காரணம் என்ன? 33 ஆயிரம் கிரணங்களைத் தன்பால் ஈர்த்து வேட்டியின் மீது பாய்ச்சுகிறது சூரிய காந்தக் கண்ணாடி இதுபோலவே இறைவனைக் குறித்துச் செய்யும் பக்தி நேராக வரும் வெயில் மாதிரி. (காய முடியுமே தவிர எரிய முடியாது) ஆனால் குரு பக்தியோ சூரியகாந்தக் கண்ணாடிக்குக் கீழ் வருகிற வெயில் மாதிரி. (குருவின் அருளால் தான் மாமிச இச்சைகள் எரிக்கப்படும்) குரு ஆண்டவரின் திருவருளை சீடனுக்குப் பாய்ச்சுகிறார்.

'குருவாய் வருவாய் அருள்வாய் குகனே'

என்று அருணகிரி நாதர் தமது அநுபூதிப் பாடல்களில் கடைசிப் பாட்டாகப் பாடியிருக்கிறார். குருவும் நம்மைப்போலவே உண்டு. உடுத்துபவராக இருந்தாலும், நம்மைப் போல மனித உருவில் இருந்தாலும், அவரை நம்மில் ஒருவராக நினைக்கக்கடாது. உதாரணமாகத் திருநீறு பசுவின் மலத்தால் ஆனது. பிற மலங்களின் நாற்றைத்தை நீக்கப் பசுவின் மலத்தை உபயோகிக்கின்றோம். பிறமலமும் மலந்தான். பசுவின்

சாணமும் மலந்தான். ஆனால் மற்ற மலங்களில் இருந்து பசுவின் மலம் வேறுபட்டது. அதுபோலவே குருநாதனின் உடம்பு பசுவின் மலம் போலவும் நமது உடம்பு பாவமலங்களால் கறைப்படுத்தப்பட்டனவாக இருப்பதையும் நினைக்கவேண்டும். பசுவின் மலத்தை நீற்றி, நீற்றப்பட்ட சாம்பலை மனிதன் அணிகின்றான். எதற்காக? இறைவனே என் மலம் போக்க நீர் இவ்வுலகில் வந்து எனக்காக உம்மையே நீற்றிக் கொண்டீரே! எனவே நீற்றப்பட்ட உம்மையே நான் அணிந்துக் கொள்கிறேன் என்பதற்காக!

எனவே தெய்வம் நம்மைப்போல மானிட உருவங் கொண்டு, தம்மையே நமக்காக நீற்றுவார் (அழித்து கொள்வார்) என்றும் அப்படிப்பட்டவரையே நாம் அணிந்து கொள்ளவேண்டும் என்றும் காண்கிறோம். இப்படிப்பட்ட குரு யார்? - (திருநீறு என்ற எமது நூலை வாசிக்கவும்)

மனித வாழ்க்கையில் ஆன்மாவானது இருள் சூழ்ந்த நிலையில் காணப்படுகின்றது. ஆன்மீக இருளை நீக்க மனித முயற்சி பிரயோசனமற்றது. இறைவனே வந்து அதை நீக்கினால் ஒழிய வேறு மார்க்கம் இல்லை. இதை சிவஞான சித்தியார் இப்படிக் கூறுகிறார்.

> "சூரிய காந்தம்" கல்லிடத்தே செய்யச்
> சுடர் தோன்றிடச் சோதி தோன்றுமாப் போல்
> ஆரியனாம் ஆசான் வந்து அருளால் தோன்ற
> அடி ஞானம் ஆன்மாவில் தோன்றும்"

(சிவஞான சித்தியார் 8:6:28)

இதைப்போலவே "குருவுருவங் கொண்டு இக் குவலயத்தில் தோன்றிப் பரவிருளை நீக்கும் பரன்" என்றும் காண்கிறோம். இறைவன் மனித அவதாரத்தில் குருவா 'வந்து மனுமக்களை அவர்களின் பாவக் கட்டுகளில் இருந்து விடுக்காவிட்டால் மனிதன் தன்னைத் தான், எப்படி

விடுவித்துக் கொள்ள முடியும்? இக்கருத்தைச் சீடா சாரத்தில் மிகவும் அருமையாகப் பக்தன் பாடியுள்ளார்.

"கட்டுண்ட கள்வன் தானோ கட்டினை விட்டுக் கொள்வான்?
விட்டவேதனையைத் தீர்க்க விடுவிப்பான்
ஒருவன் வேண்டும் 1
அட்டமா சித்திகளைக் காலறிவினால் அறியலாகும்
தட்டறப் பாசம் தீர்க்கத் தற்பர குருவே வேண்டும்"
(திருமூலர்)

'செய்த குற்றத்திற்காகக் கட்டிப் போடப்பட்டிருக்கும் ஒரு கள்வன் தன்னைத் தானே விடுவித்துக் கொள்ள முடியுமா? வேறொருவன் வந்தல்லவா அவனைக் கட்டவிழ்க்க முடியும்! அதுபோல, மனிதன் தன் மூளையறிவினால் எட்டு சித்திகளைப் பெற்றாலும் பாவக்கட்டுகளில் இருந்து அவனை விடுவிக்கப் பரலோகத்தில் இருந்து இறைவன் குரு அவதாரமாக வரவேண்டும்.' என்பதே இதன் கருத்து.

இனி இந்தக் குரு என்ற இரண்டு எழுத்துக்களுக்கு குரு கீதை சொல்லும் விளக்கங்களைக் கவனிப்போம்.

குகாரச் சாந்தகா ரோஹி ருகார அதேஜ உச்யதே!
அஜ்ஞானக் ராஸகம் ப்ரஹ்ம குருரேவ ந ஸம்ஸய:
(கு.கீ. 1 : 32)

**பொருள் :** 'கு' எனும் எழுத்து இருளைக் குறிக்கும். 'ரு' எனும் எழுத்து ஒளியைக் குறிக்கும், அஞ்ஞானத்தை விழுங்கும் பிரம்மம் குருவே என்பதில் சந்தேகம் இல்லை.

அப்படியானால் அஞ்ஞானத்தை அல்லது பாவத்தை விழுங்கின குரு யார்? இனி குரு என்ற இரு எழுத்துக்களைக் குறித்து மேலும் அறிவது என்னவெனில் :

"குகாரச் சாந்தகாரஸ்து ருகாரஸ்தந்நிரோத - க்ருத்
அந்தகார விநாசித்வாத் குரு ரித்ய பி தீயதே"

"குகாரச்ச குணாதீதோ ரூபா தீதோ குகாரக:
குண ரூப விஹீநத் வாத் குருரித்ய பிதீயதே"

"குகார: ப்ரதமோ வர்ணோ மாயதி குணபாஸக:
ருகாரோ: ஸ்தி பரம் ப்ரஹ்ம மாயா ப்-ராந்தி விமோசகம்"
(கு.கீ 1:33-35)

**பொருள் :**

'கு' என்னும் எழுத்து இருளைக் குறிக்கும். 'ரு' எனும் எழுத்து அதைப் போக்குவது. குருவானவர் இருளைப் போக்குவார் என்பதால் இப்பெயர் வந்தது.

'கு' காரம் குணத்தைக் கடந்தது. 'ரு' காரம் உருவத்தைக் கடந்தது. குணமும் உருவமும் அற்றவரே குரு என்னப்படுவார். 'கு' எனும் எழுத்து மாயை முதலியவற்றின் குணங்களை விளக்க வைப்பது. 'ரு' காரம் என்பது மாயையினால் ஏற்படும் மயக்கத்தைப் போக்கும் பரப்பிரம்மம் ஆகும்."

மேற் கூறிய சுலோகங்களின் மூலமாக குரு என்பவர் இருளைப் போக்குபவராகவும் குணமும் உருவமும் அற்றவராகவும் மனதின் மாயையை நீக்கும் பரப்ரம்மமாகவும் இருக்க வேண்டும் என்று புலனாகிறதல்லவா? இப்படிப்பட்ட குரு யார்?

இனி எப்படிப்பட்ட குருவைப் போற்றி வணங்க வேண்டும் என்பதையும் குரு கீதை மூலமாகப் பார்ப்போம்.

'நிர்க் குணம் நிர்மலம் சாந்தம்
ஜங்கமம் ஸ்திர மேவச
வ்யாப்தம் யேன ஜகத் ஸர்வம்
தஸ்மை ஸ்ரீ குரவே நம:" (1:53)

குணமற்றவராயும், மாசற்றவராயும், சாந்தராயும் உள்ள எவரால் அசைவதும் அசையாததுமான இவ்வுலகனைத்தும் வியாபிக்கப்பட்டுள்ளதோ அந்தக் குருவை வணங்க வேண்டும்.

"யத் ஸத்வேன ஜனத் ஸத்யம்
யத் ப்ரகாசேன பாதி யத்!
யதா னந்தேன நந்தந்தி
தஸ்மை ஸ்ரீ குரவே நம:" (1:55)

(எவருடைய சத்தியத்தால் உலகம் சத்தியமோ, எவருடைய ஒளியால் உலகம் ஒளிமயம் ஆகுமோ, எவருடைய ஆனந்தத்தால் உலகினர் மகிழ்ச்சியடைவார்களோ அந்தக் குருவையே வணங்க வேண்டும்.)

"அநேக ஜன்ம ஸம்ப்ராப்த
கர்மபந்த - விதாஹினே
ஜ்ஞானானல - ப்ரபாவேன
தஸ்மை ஸ்ரீ குரவே நம!" (1:63)

பிறப்பினால் கூடிவந்த கருமத் தளையை தமது ஞான அக்னியால் எரிக்கும் குருவையே வணங்கவேண்டும்.

"யஸ்மின் ஸ்ருஷ்டி - ஸ்திதி - த்வம்ஸ-
நிக்ரஹானுக்ர ஹாத் மகம்"
"க்ருத்யம் பஞ்சவிதம் சச்வத்
பாஸதே தம் குரும் பஜேத்!" (2:8)

(சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், நிக்ரஹம், அனுக்கிரஹம் என்ற ஐந்து வகையான செயல்கள் எப்பொழுதும் எவரிடம் பிரகாசிக்கின்றனவோ அந்த குருவையே வழிபட வேண்டும்.)

நித்யம் சுத்தம் நிராபாஸம்
நிராகாரம் நிரஞ்ஜனம்!
நித்ய போதம் சிதானந்தம்
குரும் ப்ரஹ்ம நமாம்யஹம்! (கு கீ (2:11))

என்றுமுள்ளவரும், பரிசுத்தரும், பொய்த் தோற்றத்திற்கு அப்பாற்பட்டவரும், வடிவற்றவரும், மாசற்றவரும், என்றும் விழிப்புடையவரும், அறிவும் ஆனந்த வடிவாகியவரும், ப்ரும்ம சொருபியுமாகிய குருவையே வணங்கவேண்டும்.

"கருணா கட்க பாதேன ச்சித்வா பாசாஷ்டகம் சிசோ:
ஸம்யகானந்த ஜனக: ஸத்குரு ஸோ பிதியதே!!" (2:21)

எட்டுப் பாசங்களையும் கருணையெனும் கத்தியாலறுத்து, ஆனந்தம் என்னும் குழந்தையை உள்ளத்தில் பிறக்கச் செய்பவர் ஸத்குரு என்று அழைக்கப்படுகிறார். அவரையே வணங்கு

மேற்சொல்லப்பட்ட குருவின் குணங்களுடைய யாராவது, எந்த அவதாரமாவது இவ்வுலகத்தில் உண்டா என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். மேலும் குருவினுடைய திருவடியில் கிடைக்கும் ஆத்மீக சுகம் எந்த சாஸ்திரத்திலும் மந்திர, யந்திரங்களிலும், சார்வாக, வைணவ, பிராபாகர மதங்களில் இல்லை என்பதையும் குரு கீதை கூறுகிறது.

"ந சுகம் வேத - சாஸ்த்ரேஷு
ந சுகம் மந்த்ர யந்த்ரகே
குரோ : ப்ரஸாதா தன்யத்ர
ஸுகம் நாஸ்தி மஹிதலே
சார்வாக - வைஷ்ணவ மதே
ஸுகம் ப்ராபாகரே ந ஹி
குரே - பாதாந்திகே யத்வத்
ஸுகம் வேதாந்த - ஸம்மிதம்" (2 : 63, 64)

எனவே பிறவிப் பெருங்கடலைத் தாண்டி இறைவனடி சேறுதற்குக் 'குரு' நாதனின் அருள்' வேண்டும் என்றும் மற்றைய எந்த வணக்கமும் நம்மைக் கடத்திச் செல்லாது. என்பதையும் காண்கிறோம். இப்படியிருக்கத் தெய்வத்தைச் சிலை வடிவத்தில் வைத்துச் சிலர் வழிபட்டு, அது தங்களைப் பக்தி விருத்திக்கு வழி நடத்தும் என்று நம்புகிறார்கள். இதைக் குறித்துக் குருகீதை சொல்வது என்னவெனில்.

"சிலாயா : கிம் பரம் ஜ்ஞானம்
சிலா சங்க : ப்ரதாரணே!
ஸ்வயம் தர்த்தும் ந ஜானாதி
பரம் நிஸ்தாரயேத் கதம்"
நவந்தனீ யாஸ்தே கஷ்டம்
தர்சனாத் ப்ராந்தி - காரகா :
வர்ஜயேத் தான்குருன் தூரே
தீ ரஸ்ய து ஸமாச்ரயேத்"

(கு. கீ 2 : 81, 82)

(கல்லை வணங்குவதால் பரம் பொருளைப் பற்றிய ஞானம் எப்படி உண்டாகும்? கல் வணக்கத்தில் பற்று வைப்பது முடிவில் ஏமாற்றத்தையே தரும். தனக்கே கடக்கத் தெரியாதது பிறரை எப்படிக் கடத்துவிக்கும்? பார்த்தாலே மதிமயக்கத்தை விளைவிக்கும் இவைகள் வணக்கத்திற்குரியவைகள் அல்ல. இவைகளை விலக்க வேண்டும். தீரனாயுள்ள குருவையே வணங்க வேண்டும்.)

குரு தீரனாக இருக்க வேண்டும். எதற்காக வென்றால் மனித ஆத்துமாக்களைப் பிடித்துப் பாவச்சிறையில் அடைத்து வைத்திருக்கிற மரணம் என்னும் கொடிய அரக்கனைக் கொன்று, வெற்றி சிறக்க வேண்டிய ஆற்றல் உள்ளவன் தான் தீரன் என்று அழைக்கப்படுவான். இந்த இலட்சணம் உள்ள குருநாதன் யார்? இப்படிப்பட்ட குருவை இதற்கு முன்பும் இப்போதும் இனி எப்போதுமே மனிதவர்க்கத்தில் காணமுடியாது. ஏனெனில் உலகில் உள்ள மனுக்குலம் அனைத்தும் பாவத்தில் பிறந்தவர்களாவர். மனிதன் குருவாக இருப்பது என்பது முடியாத காரியம். ஏனெனில் யார் யார் குருவாக இருக்க முடியாது என்பதையும் குரு கீதையில் காண்கிறோம்.

"பாகண்டின: பாபரதா
நாஸ்திகா பேதபுத்தய ||
ஸ்த்ரீலம்படா துராசாரா :
க்ருதக்னா பகவ்ருத்தய :
கமர்மப் ரஷ்டா க்ஷமா - நஷ்டா
நிந்த்ய - தர்க்கைச்ச வாதின :
காமின : க்ரோதினச்சைவ
ஹிம்ஸாச் சண்டா : சடாஸ்ததா ||
ஜ்ஞானலுப்தா ந கர்த்தவ்யா
மஹா - பாபாஸ்ததா ப்ரியே
ஏப்யோ பின்னோ குரு : ஸேவ்ய
ஏக-பக்த்யா விசார்யாச ||

(குரு கீதை 2:83-85)

(வேத மார்க்கத்திற்குப் புறம்பானவர்களும், பாவத்தில் பற்றுள்ளவர்களும், நாஸ்திகர்களும், பேத புத்தியுள்ளவர்களும், ஸ்திரிலோலர்களும், கெட்ட நடத்தையுள்ளவர்களும், நன்றி கெட்டவர்களும் கொக்கு போல வாழ்பவர்களும், கருமங்களில் இருந்து நழுவியவர்களும், பொறுமையிழந்தவர்களும், இழிவான தர்க்க வாதங்கள் செய்பவர்களும், ஆசைமிக்கவர்களும், கோபமுடையவர்களும், பிறரை இம்சிப்பவர்களும், கொடியவர்களும், வெட்கங் கெட்டவர்களும், ஞான லோபிகளும், மகா பாவிகளுமானவர்கள் குருவாக ஏற்கக்கூடியவர்கள் அல்லர். அன்புள்ளவரே! இவர்களினின்று வேறான குருவே சேவிப்பதற்கு உரியவர்!

மேற்கண்ட பாடலின்படி இவ்வுலகில் யாராவது உண்டா? ரிஷிகள், முனிவர்கள், தபோ சிரேஷ்டர்கள், மகான்கள், பண்டிதர்கள், மேதைகள், ஞானிகள் என்று நம்மால் அழைக்கப்படுகின்ற மனிதர்களில் இக்குறைபாடுகள் இல்லாதவர்கள் யாரேனும் உளரோ? கூறுங்கள்! அல்லது அவதார புருடர்கள் என்று அழைக்கப்படுகின்றவர்களில்

யாரேனும் இருக்கின்றனரா? ஒருவரும் இல்லையே! சூரர்களை வதைத்தவர்களும், பலதார மணம் செய்தவர்களும், மற்றவர்களை வஞ்சித்து ஏமாற்றியவர்களும், சூதாடினவர்களும், பகைவனை ஏமாற்றிக் கொன்றவர்களும், கள்ளத்தனம் செய்தவர்களும் மட்டுமே இதிகாசப் புராணங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளனர்? தன்னிடத்தில் குற்றம் இல்லை என்று சொல்லக்கூடிய ஒரு மனிதனாவது, அவதாரமாவது உண்டா? எண்ணிப் பாருங்கள்.

மேலும் குருகீதை 2:87-வது சுலோகம் கூறுகிறது.

"கூடோ த்ருடச்ச ப்ரீதச்ச
மௌனேன ஸுஸமாஹித :
ஸம்ருத் காம கதோ வாபி
பஞ்சதா குரு ரீரித :"

(இரகசியமானவர், திடமானவர், ப்ரீதியுள்ளவர், மௌனத்துடன் அடங்கியவர், ஒரே தடவையில் சீடனுக்கு அருள்புரிய எதிர்பாராது தன்னிச்சைப்படி வருபவர் என்று குருவானவர் ஐந்து விதமாகக் கூறப்படுகின்றார்.)

இவ்வித இலட்சணங்களுடன் சீடனுக்கு அருள்புரிய தன்னிச்சைப்படி உலகிற்கு வந்த குரு யார்? இறைவன் குருவாக வருவதைக் குறித்துத் திருமூலர் என்ற ஆதித் திராவிடபக்தன் கூறுவது என்னவென்று பார்ப்போம்.

"விண்ணின்று இழிந்து வினைக்கீடாய் மெய் கொண்டு
தண்ணின்ற தாளைத் தலைக்காவல் மேல் வைத்து
உண்ணின்றுருக்கி ஓர் ஒப்பில்லா ஆனந்தக்
கண்ணொன்று காட்டிக் களிம்பறுத்தானே"

இறைவன் குருவாக வந்து எப்படிப் பாவத்தைப் போக்குவான் எனில், அவன் வானத்தில் இருந்து இறங்கி வந்து, மனிதன் செய்தபாவ வினைக்கு ஈடு செய்யத்தானும் ஒரு மனித

சரீரத்துடன் தோன்றி, தன் ஒப்பற்ற பாத கமலங்களை மனித புத்திக்குக் காவலாகவும் மாதிரியாகவும் வைத்து, மனித ஆத்துமாவை இளகச் செய்து (மனஸ்தாபப்படச் செய்து) தன் கண்களினால் அவனுக்கு வேண்டிய ஆலோசனைகளைக் கூறி, இவ்விதமாக அவன் பாவங்களைப் போக்குவார்.

இறைவன் மனிதனைப் போலவே ஒரு அவதாரமாக வரவேண்டும் என்பதற்குச் சிவஞான போதம் எட்டாவது சூத்திரம் கூறுகின்றதையும் பார்ப்போம்.

"ஐம்புல வேடவரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம் முதல் குருவுமாய் தவத்தினில் உணர்ந்த விட்டு
அன்னியம் இன்மையின், அரன் கழல் செலுமே."

(8-ம் சூத்திரம்)

மனித ஆத்துமாவானது ஐந்து புலன்களாகிய வேடர்களுக்குள்ளேயே வளர்ந்து அயர்ந்து கிடக்கின்றது. உணர்வின்றிக் கிடக்கின்றது. 'உணர்த்த உணர்தலின்' என்று மூன்றாவது செய்யுளில் மெய்கண்டார் குறிப்பிடுவதிலிருந்து அயர்ந்து கிடக்கும் ஆன்மாவை - உணர்த்திக்காட்ட ஒருவர் வேண்டும் என்பதையும் அறியலாம். எல்லாவற்றிற்கும் முதல்வனாய் இருக்கின்ற இறைவன் குருவாய் வந்து உணர்த்துவானாம். எப்படியென்றால் 'தவத்தினில் உணர்த்த' என்கின்றார். தவம் என்றால் தன்னை மற்றவர்களுக்காக அழித்துக் கொள்ளுதல் என்றே பொருள்.

வள்ளுவரும்

"தன்னுயிர் தான் அறப் பெற்றானை - ஏனைய
மன்னுயிரெல்லாம் தொழும்" என்றார்

எனவே, மற்றவர்களைக் காக்கும் பொருட்டுத் தன்னை அழித்துக் கொள்ளும் தவக் கோலத்தில், பாவத்திற்குள் அடிமையாகக் கிடக்கும் ஆத்துமாக்களை உணர்த்த, ஆத்துமா இப்போது விழிப்படைந்து எழுந்து கொள்கிறது. குருவைப்

பின்பற்ற ஆரம்பிக்கின்றது. இப்போது குருவுக்கும் ஆத்மாவிற்கு வேற்றுமை, இடைவெளி இல்லை என்பதால் 'அன்னியம் இன்மை' என்கின்றார்.

இந்த ஐக்கியம் ஏற்பட்டவுடனே
"அவனே தானேயாகிய அந்நெறி
ஏகனாகி இறை பணிக்க மலம் மாயை
தன்னுடன் வல்வினையின்றே." (10வது சூத்திரம்)

இறைவனும் தானும் ஒன்று என்ற ஐக்கியம் ஏற்பட்டவுடனே, இவ்வளவு நாட்களும் பாவத்திற்கு அடிமைப்பட்டு அதன் சொற்கேட்டு நடத்த ஆத்மா இப்போது இறைபணிக்க - இறைவன் கட்டளையிடவும், தான் அதற்குக் கீழ்ப்படிந்து நடக்கவும் ஆரம்பிக்கின்றது. இப்படி நடப்பதினால் மூன்று வித பாவ நிலைகளையும் (பாவம், மாயை வினை) இழந்து. இறைவனடி சேருகின்றது. இதையே இன்னும் சற்றுத் தெளிவாகக் கூறியிருக்கின்றார் சிவஞான சித்தியார்.

"மன்னவன் தன் மகன் வேடரித்தே தங்கி
வளர்ந்து அவனை யறியாது மயங்கி நிற்பப்
பின்னவனும் என் மகன் நீயென்று அவரின் பிரித்துப்
பெருமையொடு தானாக்கிப் பேணுமாப் போல்
துன்னிய ஐம்புல வேடரின் சூழலில் பட்டுத்
துணைவனையும் அறியாது துயருறும் தொல்லுயிரை
மன்னும் அருள் குருவாகி வந்து அவரின் நீக்கி
மலம் அகற்றித் தானாக்கி மலரடி கீழ்வைப்பான்"
(சிவஞான சித்தியார் சுபக்கம் 253)

மன்னவன் ஒருவனுக்கு மைந்தன் ஒருவன் இருந்தான். அவன் காட்டிற்குள் சென்று வேடர்கள் மத்தியில் தங்கிவிட்டான். இதனால் தன் அரச நிலையையும் அரண்மனை வாசத்தையும் மறந்து, மயங்கிய நிலையில் இருந்தான். இதையறிந்த மன்னவன், ஒரு சாதாரண மனிதன் போல்

காட்டிற்குள் சென்று, மகனுக்குப் புத்தி கூறி, வேடர்களினின்றும் அவனைப் பிரித்து, 'நீ என் மகன் என்று விளங்கவைத்து, அவனைத் தன்னைப் போலாக்கிப் பெருமைப் பட்டானாம். அது போல, ஐந்து புலன்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவிக்குள் மயங்கி தன் மெய்த்துணைவனை அறியாமல் தவிக்கின்ற ஆத்மாவை, இறைவனாகிய மன்னவன் அருள் வழங்கும் குருவாக வந்து, புலன்களின் மாயையிலிருந்து விடுவித்து, பாவமறக் கழுவி, தன்னைப் போன்ற நிலைமையைக் கொடுத்து, தன்னுடன் சேர்த்துக் கொள்வான் என்பதே சிவஞான சித்தியாரின் கருத்து.

இப்படிப்பட்ட குரு யார்?

திருவாய் மொழியில்

"துயரில் சுடரொளி தன்னுடைச் சோதி
நின்றி வண்ணம் நிற்கவே
துயரின் மலியும் மனிதப் பிறவியில் தோன்றிக்
கண்காண வந்து
துயரங்கள் செய்தே தன் செய்வ நிலை உலகில் புக
வைக்கும் அம்மான்
துயரமில் சீர்க்கண்ணன் மாயன் புகழ்
தூற்ற, யானோர் துன்பமிலேனே......"

என்று காண்கிறோம். இதன் பொருள் என்னவெனில், துயரமே இல்லாத ஜோதிமயமான இறைவன், துயரங்களில், நிறைந்து வாழும் மனிதனை விடுவிக்க, மனிதப் பிறவியிலேயே தோன்றி, மனிதரின் கண்கள் காணப்பிறந்து, தானே எல்லாத் துயரங்களையும் ஏற்றுக்கொண்டு தன் தெய்வீக நிலையை உலகிற்குக் காட்டுவான். துன்பம் இல்லாதவனும் பாவத்தைப் பார்க்க மாட்டாத சீர் பொருந்தின அருட் கண்களையுடைய-வனாகிய இந்த இறைவனின் அருட் தன்மையை நான் உலகிற்கு அறிவிப்பேனாகில் எனக்கு இனி ஒரு துன்பமும் இல்லை - என்கின்றார்.

இப்படிச் செய்த குரு யார்?

இனி இக் குருவைப் பற்றி, மற்ற பக்தர்கள் என்ன பாடியுள்ளார்கள் என்பதைச் சிந்திப்போம்.

"ஞான நெறிக்கேற்ற குரு நண்ணரியச் சித்தி முத்தி
தானம் தருமம் தழைத்த குரு - மானமொடு
தாயெனவும் வந்தென்னைத் தந்தகுரு-என் சிந்தை
கோயிலென வாழும் குரு" (தாயுமானவர் 82)

இறைவன் எப்படிப்பட்ட குருவாக வந்தருளுவார் எனின், அவர் மக்களுக்கு ஞான வழியைக் காட்டக் கூடியவர். பெறுதற்கரிய சித்திகளும், முத்திகளும், தானமும் தருமமும் தன்னிடத்திலேயே மிகுதியாக வைத்திருப்பவர். தாயைப் போல என்னில் அன்பு கூர்ந்து. என்னை எனக்கே திரும்ப அளித்த குரு, என் சிந்தையில் எப்பொழுதும் வாழும் குரு - என்று தாயுமானவர் கூறுகிறார் - இப்படிப்பட்ட குரு யார்?

இனிப் பாம்பாட்டிச் சித்தருடைய பாடலைக் கவனிப்போம்.

"காயம் நிலை அழியைக் கண்டுகொண்டு பின்
கற்பு நிலை யுள்ளிற் கொண்டு எக்காலமும் வாழும்
தூய நிலை கொண்ட பரிசுத்த குருவின்
துணையடி தொழுது நின்று ஆடு பாம்பே."

"பொய் மதங்கள் போதனை செய் பொய்க் குருக்களைப்
புத்தி சொல்லி நன்னெறியில்போக விடுக்கும்
மெய் மதந்தான் இன்னதென்று மேவ விளம்பும்
மெய்க் குருவின் பாதம் போற்றி ஆடு பாம்பே"

"வேதப் பொருள் இன்னதென்றும் வேதங்கடந்த
மெய்ப் பொருளைக் கண்டு மனம் மேவ விரும்பிப்
போதப் பொருள் இன்னதென்றும் போதனை செய்யும்
பூரண சற்குரு தாள் கண்டு ஆடுபாம்பே"

பொய்யான மார்க்கங்களைக் கடிந்துகொண்டு மெய்யான மார்க்கத்தை அல்லது வழியைக் காட்டின குரு யார்? அறிவுக்கு எட்டாத வேதப் பொருளை உலகிற்கு அறிவித்த பூரண சற்குரு யார்? எந்த நிலையிலும் தன்னைப் பரிசுத்தமாகக் காத்துக் கொண்ட பரிசுத்த குரு யார்?

திருமூலர் எட்டுக் குருமார்களைச் சுட்டிக் காட்டுகிறார்.

நான்கு நந்திகள் - நான்கு திசைகளுக்கு
சிவயோக மாமுனிவர்
பதஞ்சலி முனிவர்
வியாக்கிரபாத முனிவர்
திருமூலர் ஆகியோர்.

ஆயினும் 6-ம் தந்திரம் 1576-ம் பாடலில்

எல்லா உலகுக்கும் அப்பாலோன் இப்பாலாய்
நல்லார் உள்ளத்து மிக்கருள் நல்கலால்
எல்லோரும் உய்யக் கொண்டிங்கே யிருத்தலால்
சொல்லார்ந்த நற்குரு சுத்த சிவமே - என்கிறார்.

மேலும், தன்னையும் ஒரு குரு என்று சொன்ன திருமூலர் தானே ஒரு குருவைத் தேடுவதாகவும் சொல்லியிருப்பது சிந்தனைக்குரியது.

தேடுகின்றேன் திசை யெட்டோ ரிரண்டையும்
நாடுகின்றேன் நலமே யுடையானடி
பாடுகின்றேன் பரமே துணையா மெனக்
கூடுகின்றேன் குறையா மனத்தாலே

என்ற பாடலில், குருவை பதினாறு திசைகளிலும் தேடுவதாகவும், நன்மை செய்கிறவாய் சுற்றித் திரிகின்ற குருவின் பாதங்களை நாடுவதாகவும், பரத்திலிருக்கின்ற இறைவனாகிய குருவைப் பாடுவதாகவும, தன் குறைவான மன நிலையிலும் அக்குருவைக் கூடுவதாகவும் சொல்லுகிறார்.

மாசில்லாத அன்பாகிய சுத்த சிவத்தை வழிபட்டு உய்யும் முறையைக் காண்பிக்கக் கூடிய குருவை வழிபட்டால் பயனடையக் கூடும் என்று கீழ்காணும் பாடலில் சொல்லுகிறார்.

சிவனை வழிபட்டார் எண்ணிலி தேவர்கள்
அவனை வழிபட்டுங் காமாறொன்றில்லை
அவனை வழிபட்டுங் காமாறு காட்டும்
குருவை வழிபடில் கூடலுமாமே.

மெய் குருவைத் தேட மற்றொரு குருவின் துணை தேவையாயிருக்கிறது. மனிதன் குரு அல்ல. அப்படியானால் இந்த குரு யார்?

மருவன்றியே நின்ற மாயப் பிரானைக்
குருவன்றியார்க்கும் கூட வொண்ணாதே

என்ற திருமூலரின் வரிகள் அதை மெய்ப்பிக்கின்றன!

குருவை அறிந்து கொள்ளும் பொறுப்பைத் திருமூலர் சிலேடையாக நம்மிடம் சொல்லுகிறார். அவர் ஏன் தன் கருத்துக்களை நேரிடையாகச் சொல்லாமல் மறைமுகமாகவே சொல்லுகிறார் என்பது சிந்தனைக் குரியது. ஒருவேளை ஆரியரின் ஆதிக்கம் அவரை அப்படி எழுத வைத்திருக்கலாமோ என்னவோ?

"கட்டுண்ட கள்வன் தானோ கட்டினை விட்டுக் கொள்வான்
விட்ட வேதனையைத் தீர்க்க விடுவிப்பான் ஒருவன் வேண்டும்
அட்டமா சித்திகளைக் காலறிவினால் அறியலாகும்
துட்டறப் பாசம் தீர்க்கத் தற்பர குருவே வேண்டும்."

"விண்ணின்றிழிந்து வினைக் கீடாய் மெய் கொண்டு
தண்ணின்ற தாளைத் தலைக் காவல் மேல் வைத்து
உண்ணின்றுருக்கியோர் ஒப்பில்லா ஆனந்தக்
கண் கொண்டு காட்டிக் களிம்பறுத்தானே."

"நீரிலே முளைத் தெழுந்த தாமரையின் ஓரிலை
நீரிலே நின்றவாறும் நீரில்லாதவாறு போல்
பாரிலே முளைத் தெழுந்தப் பண்டிதப் பராபரன்
பாரினோடு கூடி நின்ற பண்பு கண்டிருப்பீரே"

பாவக்கட்டிலிருந்து மனிதன் தன்னைத் தானே விடுவித்துக் கொள்ள இயலாது. அவனை விடுவிக்க வேறொருவர் வேண்டும். அவர் வானத்திலிருந்து இறங்கி வருவார். மனிதனைப் போன்ற சரீரத்துடன் வருவார். அச்சரீரத்தை மனிதனை மீட்கும் பொருளாக ஈடு கொடுப்பார். மனித உள்ளத்தை உருக்கச் செய்வார். அவனுடைய வாழ்க்கைக்கு முன் மாதிரியாகத் தன்னுடைய ஒப்பற்ற பாத அடிச் சுவடுகளை விட்டுச் செல்வார். பாவிகள் நிறைந்த உலகத்திலிருந்தாலும் அவரிடத்தில் பாவம் இருக்காது என்ற கருத்தை தெரிவிக்கும் திருமூலரின் மூன்று அருமையான பாடல்களை வியக்காமலிருக்க இயலாது.

மேலும் திருமந்திரம் 6 : 1578-ல்

"சுத்த சிவன் குருவாய் வந்து தூய்மை செய்
தத்தனை நல் கருள் காணா அதிமூடர்
பொய்த்தகு கண்ணான் நமர் என்பர், புண்ணியர்
அத்தன் இவன் என்றடி பணிவாரே," என்று

காணப்படுகிறது. இதன் பொருள் என்னவெனில் இறைவன் பரிசுத்த குருவாக இவ்வுலகில் தோன்றி தம்மை வெளிப்படுத்துவார். இதை அறியாத மூடர்கள் அவரைச் சாதாரண மனிதன் என்பார்கள். பக்தர்களோ வெனில் அவரையே இறைவனெனக் கண்டு வணங்குவார்கள் என்பதே.

இனி கௌதமர் கூறும் குருவைக் குறித்துக் காண்போம்.

"சற்குருவின் பெருமைதன்னை உலகு தன்னில்
தானறியச் சாற்றுகின்றோம் சார்ந்து கேளும்

சற்குருவாய் எவ்வுயிர்க்குத் தானே தானாய்ச்
சகல சீவ ஆன்மாவின் குருவுமாகிச்
சற்குருவே பேரொளியாய் நின்றசோதி
தாரணியில் மானிடத்தின் சட்டை சாற்றி
சொற்குருக்கள் தங்களுக்குச் சீடன் போலாய்ப்
புத்திமதி சொல்லியே புரிவோர் தாமே."

ஒவ்வொரு ஜீவாத்மாவிற்கும் இறைவனே சற்குருவாக இருப்பாராம். இவர் சாதாரண மனிதனைப் போல அவதாரமாகி உலகில் வருவாராம். இவர் ஜோதியாகத் தம்மை வெளிப்படுத்துவாராம். உலகின் கண் உள்ள மனிதர்களுக்குப் பணிபுரிய சீடன் போலத் தன்னைத் தாழ்த்தி, அத்துடன் மக்களுக்குப் புத்திமதிகளையும் கூறுவாராம். இப்படிப்பட்ட குருயார்?

மேலும் கௌதம விருத்தம் கூறுகிறது.

"ஆதியந்த மில்லாத காலந்தன்னில்
அநாதியாய் நின்றது தான் பரமென்றாகும்
ஆதியந்தம் படைத்த பரன் மனுவோர்க்காக
அறியாத குருவென வந்தாண்டதாகும்."

இதன் பொருள் பரன் என்றழைக்கப்படும் அநாதி தேவன் மனுக்குலத்தை இரட்சிக்க 'குரு' வாக வந்து அவர்களை ஆட்கொள்வார் என்பதேயாகும்.

இனி கைவல்ய நவநீதத்தின் 86-வது பாடலைக் கவனிப் போம்.

"ஐயனே எனதுளே நின்று அனந்த சென்மங்கள் ஆண்ட
மெய்யனே உபதேசிக்க வெளிவந்த குருவே போற்றி
உய்யவே முத்தி நல்கும் உதவிக்கோர் உதவி நாயேன்
செய்ய வேறொன்றுங் காணேன் திருவடி போற்றி போற்றி"

மேலும் மகாத்மா காந்தி ஒரு முறை, "பிழைபடாமல் மற்றவர்களுக்கு வழிகாட்டியாக, குருவாக இருக்க வேண்டுமானால், கொஞ்சம் கூடக் குற்றமில்லாதவனாகவும், தீமையைப் பகைக்கிறவனாகவும் இருக்கவேண்டும். இந்தத் தகுதி எனக்கு இல்லை. என்னுடைய ஆத்மா குறைவுள்ளதே! என் ஆத்மா போராட்டம் நடத்துகின்றது, முயற்சி செய்கின்றது, பிழையும் செய்கின்றது." என்றும் "மனித இயற்கைக்கு மேம்பட்ட சக்தி ஒன்றும் எனக்கில்லை. அது எனக்கு வேண்டாம். எல்லோரைப் போலவே நானும் அழியும் உடலைப் பெற்றிருக்கிறேன். நானும் தவறு செய்பவனே" என்றும் கூறுகிறார். (Young India 26-9-1924, 10-2-1922).

இதிலிருந்து குருவைக் குறித்து நாம் அறிந்து கொள்வது என்ன?

1. குரு தெய்வத்தையும் மனிதனையும் இணைக்கும் மத்தியஸ்தன் - பாலம். மனிதனுக்கு மனிதனாகவும் இறைவனுக்கு இறைவனாகவும் இருக்கவேண்டும்.

2. குரு பாவத்திலிருந்து மனிதனை விடுவிப்பவராக இருக்க வேண்டும்.

3. குரு மாசற்றவராயும், சாந்தராயும் இருக்க வேண்டும்.

4. குரு உலகிற்கு மகிழ்ச்சியை அளிப்பவராக இருக்க வேண்டும்.

5. குரு ஜென்ம, கரும பாவங்களைத் தமது ஞானத்தினால் அழிப்பவராக இருக்க வேண்டும்.

6. குரு ஆக்கல், காத்தல், அழித்தல், அருளல், நியாயந் தீர்த்தல் என்ற ஐந்து தன்மைகளையும் உடையவராக இருக்கவேண்டும்.

7. குரு எட்டு விதப் பாசங்களையும் தமது கருணையெனும் கத்தியால் அறுப்பவராக இருக்க வேண்டும்.

8. குரு மனித ஆத்துமாக்களை இரட்சித்துப் பரலோகம் சேர்க்கிறவராயிருக்க வேண்டும்.

9. குரு இரகசியமானவர், திடமானவர், ப்ரீதியுள்ளவர் மௌனத்துடன் அடங்கியவர், சீடர்களுக்கு அருள்புரிய தன் விருப்பப்படி ஒரு தடவை அவதாரம் எடுத்து வருபவர் - என்று இருக்க வேண்டும்.

10. குரு புலன்களுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கின்ற ஆத்துமாக்களை மீட்க, அவதாரம் எடுத்துவர வேண்டும். அவரும் ஐந்து புலன்களைக் கொண்ட தமது சரீரத்தினால் மனிதனுக்குப் பதிலாகி (பலியாகி) அவனை மீட்க வேண்டும்.

11. குரு மனிதத் துன்பங்களைத் தான் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

12. குரு மனிதனுக்கு ஞான வழி காட்டியாக இருக்க வேண்டும்.

13. குரு பரிசுத்தராக இருக்க வேண்டும்.

14. குரு பொய் வழியை எச்சரித்து மெய் வழியைக் காட்டுகிறவராய் இருக்கவேண்டும்.

15. குரு மெய்ப் பொருளை அறிவிக்கும் பூரண சற்குருவாக இருக்க வேண்டும்.

16. குரு தீமையைப் பகைக்கிறவனாகவும் கொஞ்சம் கூடக் குற்றமில்லாதவனாகவும் இருக்கவேண்டும்.

இப்படிப்பட்ட குரு யார்?

மேற்கண்ட தகுதியுடையவரும், நமது இந்தியாவின் தலை சிறந்த தமிழ் வேதங்கள் மூலமாகவும் சமஸ்கிருத வேதங்கள் மூலமாகவும் அறிவிக்கப்பட்டபடி : இக்குணங்களையுடைய குரு

யாராக இருக்கலாம்? என்பதைச் சிந்திப்போம். மனிதனில் ஒருவனும் இத் தகுதியை உடையவரல்லர். புத்தர், இராமகிருஷ்ணர், விவேகானந்தர் போன்றவர்கள் கூடத் தங்கள் தகுதியின்மையை அறிக்கை செய்தவர்களே! நமது கண்களுக்கு முன் தோன்றுகின்ற மகாத்துமாக்களும், ஞானிகளும் கூட இத்தகுதிகளையுடையவர்கள் அல்லர். சிலர் ஒரு சில தகுதியுடையவர்களாக இருந்தாலும் எல்லாத் தகுதிகளையும் உடையவர்கள் ஆகமாட்டார்கள். அரைகுறைத் தகுதிகளை-யுடைய 'குரு'மார்கள் பூரண சற்குருவாக இருக்க முடியாது.

அப்படியென்றால் இறைவன் - தான் குருவாக வரமுடியும் என்பதையும் அப்படி வருகின்றவன் ஒரே முறை வந்து, வழிகாட்டிவிட்டு, மனித ஆத்மாக்களுக்குத் தன்னையே மாதிரியாகவும் வைத்துவிட்டுச் செல்வான் என்றும் கடந்த பகுதிகளில் கண்டோம். இப்படி அவதாரம் செய்த குரு எந்த அவதாரத்தில், இத்தகைய குணங்களையுடையவராகக் காணப்படுகின்றார்?

புராணங்களும் இதிகாசங்களும் கதைகளே யென்றும் அவைகளில் வர்ணிக்கப்பட்டிருக்கின்ற தெய்வ அவதாரங்கள் கற்பனையே என்றும் யாவரும் அறிவார்கள். அப்படியே இவ்வவதாரங்களை ஒரு பொருட்டாக மதித்து எடுத்துக் கொண்டாலும் இந்த அவதார புருடர்களில் ஒருவராகிலும் 'குரு' என்ற ஸ்தானத்தில் நிற்க இயலாதவர்களே! அப்படியானால் இக்குரு யார்?

எனக்குத் தெரிந்தவரை, நான் படித்த வேதங்களுக்குள் மறைந்து கிடக்கும் உண்மையின்படிக் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து ஒருவரே இந்த எல்லாத் தகுதிகளையும் உடைய குருவாக இருக்கின்றார். வேறு யாராகிலும் இத்தகைய 'குரு' ஸ்தானத்திற்கு ஏற்றவராக இருப்பின் தகுந்த வேத ஆதாரங்களுடன் எனக்கு எழுதுங்கள்.

இனி இயேசுக் கிறிஸ்துவே இக்குரு என்பதற்கு அவரை வெளிப்படுத்திக் காட்டும் பைபிள் மூலமாகவும் மற்றைய வேதங்கள் வெளிப்படுத்தின தன்மையின்படியேயும் நாம் விரிவாகக் காணலாம்.

## புருஷன் - குரு

மரணமில்லாப் பெருவாழ்வையடைய புருஷனை நம் குருவாக அடையவேண்டும். நித்ய ஜீவன் என்பது இறைவனின் ஈவு. அழிவில்லாத தேவனாகிய புருஷனில்லாமல் அதை நாம் அடைய இயலாது. குரு இல்லாமல் அந்த நித்ய இராஜ்ஜியத்தையடைய இயலாது என்றே வேதங்களும் சொல்லுகின்றன. புருஷனும் குருவும் ஒன்றே.

இந்நாட்களில் போதிக்கிறவர்கள், ஆசிரியர்கள் யாவரையுமே குரு என்று அழைக்கிறார்கள். வேதத்தின்படி அண்டசராசரங்களுக்கும் ஒரே ஒரு குரு மட்டுமேயுண்டு.

குஸப்தஸ்த்வந்தகாராஸ்யாத்ரு
தன்னிரோத்காஹ் அந்தகார நிரோதித்
குருரித்ய பிதியதே. (அத்வயதாரக உபநிஷத்து)

(கு என்பது இருள் ரு என்றால் அழிப்பவர். இருளை அழிப்பவரே குரு)

"கு காரச் சாந்தஹாரோ ஹி
ரு காரஸ் தேஜ்ய உச்யதே
அஞ்ஞானக் கிராசகம் ப்ரம்ம
குருரேவ நஸம்ஸய" (குருகீதை - 44)

(கு என்பது இருள் ரு என்பது ஒளி, சந்தேகமின்றி குருவே கடவுள். அவரே அஞ்ஞானமாகிய இருளை அழிப்பார்)

'குரு ரேவ ப்ரம்ஹ'. குருவே கடவுள் என்பதைக் கவனிக்க வேண்டும். ந ஸம்ஸய, சந்தேகமில்லாமல் குருவே

கடவுள். ஏனெனில் குருவாகிய கடவுளால் மட்டுமே இவ்வுலகத்தின் இருளையும், பாவங்களையும் அறியாமை-யையும், அழிக்க இயலும்.

உபநிஷத்துகளும் பிழையின்றிக் குருவே கடவுள் என்பதை நிச்சயப்படுத்தியிருக்கின்றன.

| | |
|---|---|
| குருரேவ பரப்பிரம்மம் | குருவே உயர்ந்த கடவுள் |
| குருரேவ பராகதி | குருவே உயர்ந்த வழி |
| குருரேவ பரவித்யா | குருவே உயர்ந்த ஞானம் |
| குருரேவ பராயனம் | குருவே உயர்ந்த பிரயாணம் |
| குருரேவ பரா காஸ்தா | குருவே உயர்ந்த உச்சநிலை |
| குருரேவ பரம் தனம் | குருவே உயர்ந்த செல்வம். |

(அத்வயதாரக உபநிஷத்து 17, 18)

குரு என்பவர் சந்தேகமின்றிச் சாதாரண மனிதன் அல்ல, அவர் தேவனே. மனிதன் இவ்வுலகை விட்டு அவ்வுலகத்-திற்குப் பிரயாணமாய்ப் போக இந்தகுருவே வழி. சாதாரண வழியல்ல உயர்ந்த வழி. "பரம்" என்ற வார்த்தை உயர்ந்த, அதிகாரமுள்ள என்று பொருள்படும். இந்த குரு மனிதனுக்கு உயர்ந்த வழிகாட்டி. ஞானத்தை அருளி, உயர்ந்த நிலையில் வைத்து, உயர்ந்த செல்வத்தையும் அருளுகிறார். ஏனெனில் அவர் உயர்ந்த அதிகாரமுள்ள தேவன்.

பாவ மனிதன் பரலோக காரியங்களைக் கற்றுக் கொள்ள இயலாது. அவன் பாவியாய் இருக்கிற படியினால் பரலோகம் போகவும் இயலாது. வழியும் தெரியாது. பரலோக காரியங்களை அறியாமல் பரலோகம் செல்லவும் இயலாது. பாவமனிதன் எதையாகிலும் அறிந்து கொள்ள வேண்டுமாயின் அவன் அதைக் காண வேண்டும், தொட்டுப் பார்க்க வேண்டும், ருசித்துப் பார்க்க வேண்டும், முகர்ந்து பார்க்க வேண்டும். எனவே, கடவுள் குருவாக இவ்வுலகுக்கு வரா விட்டால் மனிதன் கடவுளை அறிய இயலாமலேயே போய்விடுவான். கடவுளே

குருவாக இருக்கிறபடியினால் அக்குரு வழிகாட்ட இங்கு வரவேண்டும். உபநிஷத்தில் சொல்லப்பட்டபடி அஸ்வதா என்னும் மரம் வானத்தில் வேர் பற்றி பூமியை நோக்கிக் கிளைவிட்டது போல, புருஷசூக்தத்தில் கடவுள் மனிதனாக வந்து உலகில் பலியாக வேண்டும் என்று காணப்படுவது போல, கடவுள் குருவாக உலகில் வரவேண்டும் என்றே வேதநூல்கள் சொல்லுகின்றன.

வேதங்களிலும் உபநிஷத்துகளிலும் சொல்லப்பட்டுள்ள குருவின் தன்மைகள் எவ்வாறு மனித (புருஷன்) குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவில் காணப்படுகின்றன என்று காண்போம்.

## 1. குரு இருளாகிய பாவத்தை அழிக்கிறவர்

உபநிஷத்துக்களின்படி குருவே இருளை அழிக்கிறவர் அவர் ஒளி. இருளானது பாவத்திற்கும் மரணத்திற்கும் அடையாளம். இருளிலிருந்து வெளிச்சத்திற்கு உட்படுத்தும் (தமஸோமா ஜ்யோதிர் கமய) என்று அவர்கள் ஜெபம் செய்தபோது பாவத்திலிருந்து விடுதலை செய்தருளும் என்பதே ஜெபத்தின் கருத்தாகும். அந்த ஜெபத்தின் அடிப்படை விண்ணப்பம் என்ன வெனில் ம்ருத்யோமா அம்ருதம் கமய, மரணத்திலிருந்து ஜீவனுக்குட்படுத்தும், என்பதே.

இருளை அழிப்பது என்றால் பாவத்தையும் மரணத்தையும் அழிப்பது என்பதே பொருள் இயேசுக்கிறிஸ்து உலகிற்கு மனிதனாக (புருஷனாக) வந்த நோக்கம் அதுவே. தன்னுடைய சிலுவை மரண பலியினால் பாவத்தின் வல்லமை-களையும் மரணத்தையும் அழித்தார். இயேசு சொன்னார்:

"நான் உலகத்திற்கு ஒளியாய் இருக்கிறேன்
என்னைப் பின்பற்றுகிறவன் இருளில்
நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்" என்றார்

(யோவான் 8 : 12)

இயேசு ஜீவ ஒளி என்றார். ஒளி என்றால் ஜீவன், இருள் என்றால் மரணம் என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

உபநிஷத்திலும் இப்படியே சொல்லப்பட்டுள்ளது
தமஸோமா ஜ்யோதிர் கமயேதி
ம்ருத்யுர்வய் தமஹ ஜ்யோதிர் அம்ருதம்
(ப்ருகதாரண்யக உபநிஷத்து 1:3:28)

(இருளிலிருந்து ஒளிக்குள் வழிநடத்தும், இருள் என்பது மரணம், ஒளி என்பது ஜீவன்)

இயேசுவே உலகத்தின் ஒளிஎன்பதைக் குறித்து யோவான் எழுதுவது என்னவெனில் :

“அவருக்குள் ஜீவன் இருந்தது. அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாய் இருந்தது. அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது. இருளானது அதைப் பற்றிக் கொள்ளவில்லை.” (யோவான் 1:4,5)

சில வேதாகம மொழி பெயர்ப்பில் இருளானது அதை ஒத்துக் கொள்ளவில்லை யென்றும், விளங்கிக் கொள்ளவில்லை என்றும் சொல்லுகின்றன. எப்படிப் பார்த்தாலும் சரியே! ஏனெனில் யோவான் மறுபடியும் இந்த ஒளியைக் குறித்துச் சொல்லும் பொழுது:

“ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத் தீர்ப்புக்கு ஏதுவாக இருக்கிறது. பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான். தன் கிரியைகள் கண்டிக்கப்படாத படிக்கு ஒளியினிடத்தில் வராதிருக்கிறான். சத்தியத்தின் படிச் செய்கிறவனோ தன் கிரியைகள் தேவனுக்குள்ளாய்ச் செய்யப்படுகிறதென்று வெளியாகும் படிக்கு ஒளியினிடத்தில் வருகிறான். (யோவான் 3:19-21)

சூரியனின் வெளிச்சம் இருளைக் கிழித்து அதை அகற்றுகிறது போல, மனுஷ குமாரனாகிய புருஷ பிரஜாபதி பாவிகளின் பாவத்தைக் கிழித்து, அப்பாவங்களை அகற்றுகிறார். அவர் ஒளியாக இருக்கிறார். அவரிடத்தில் எவ்வளவேனும் இருள் இல்லை. எந்த மனுஷனையும் பிரகாசிக்கச் செய்கிற ஒளியாக இயேசு இருக்கிற படியால்,

"மகனே திடன்கொள் உன் பாவங்கள் உனக்கு
மன்னிக்கப்பட்டன" (மத்தேயு 9:2)

என்று சொல்லுகிறார்.

ஏனெனில்

"பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷ குமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும்."

(மத்தேயு 9:6)

என்றும் சொல்லியிருக்கிறார். பாவங்கள் மன்னிக்கப்படும் பொழுது அதினால் ஏற்பட்ட வியாதிகளும் மன்னிக்கப் படுகின்றன என்பதை, அதைத் தொடர்ந்து வரும் வசனம் விவரிக்கிறது.

"நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு உன் வீட்டுக்குப் போ" என்றார்

எனவே குரு பாவத்தை அழிப்பதின் மூலம் பாவத்தின் பலனாகிய மரணத்தையும் அழித்து நித்ய ஜீவனையும் அருளுகிறார் என்பது விளங்குகிறது.

இறைவன் சோதி மயமானவன் என்பதையும் குருவடிவானவன் என்பதையும் பலியாகிறவன் என்பதையும் அகஸ்தியர் ஞானம் 30ல் காணலாம்.

வணங்குவாய் செகசோதி ஒருவனாகி
மாநிலத்தை ஒரு நொடியில் வகுத்தே மண்ணில்
குணமான மனிதரையும் படைத்தபின்பு
குவலயத்தில் தான் உதித்துக் குருவாய் நின்று
சனமான சமுசாரம் ஒன்றில்லாமல்
சந்நியாசி போலிருந்து தவத்தைக் காட்டி
அன்பான சித்தர்களை அமைத்துப் போட்டு
அகன்ற தளம் சென்றவரை அண்டுவாயே!

## 2. குருவே சர்வ வல்லமையுள்ள கடவுள்

(குருரேவ பரம்பிரம்ஹ)

அத்வயத் தாரக உபநிடதம் குருவே சர்வ வல்லமையுள்ள கடவுள் என்பதை உறுதிப்படுத்திச் சொல்லுகிறது. இவ்வுலகின் கண்ணுள்ள மனித குருக்கள் கடவுளல்ல என்பது தெளிவு. எவ்வளவோ உபாத்தியாயர்களும் ஆசான்களும் உலகில் காணப்பட்டாலும் இவர்கள் சாதாரண குருக்களேயாவார்கள். இறைவன் ஒருவர் மட்டுமே குருவாக இருக்க இயலும்.

**இயேசுக் கிறிஸ்துவும் ஒரு முறை :**

"நீங்களோ ரபி (குரு) என்று அழைக்கப்படாதிருங்கள். கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராக (குருவாக) இருக்கிறார். நீங்கள் எல்லோரும் சகோதரராய் இருக்கிறீர்கள்.

பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள், பரலோகத்திலிருக்கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாக இருக்கிறார். நீங்கள் குருக்கள் என்றும் அழைக்கப்படாதிருங்கள். கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாயிருக்கிறார்" (மத்தேயு 23 : 8-10)

என்று திட்டவட்டமாய்ச் சொல்லியிருக்கிறார்.

தேவனாகிய கர்த்தர் வானத்திலிருந்து பூமிக்கு இயேசுக் கிறிஸ்துவாக வந்தார். தம்முடைய சீஷனாகிய பிலிப்பு என்பவன் பிதாவைத் தங்களுக்குக் காட்ட வேண்டும் என்று தங்கள் குருவாகிய இயேசுவிடம் கேட்டபோது, இயேசு சொன்னார்.

"பிலிப்புவே, இவ்வளவு காலம் நான் உங்களுடனே கூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான். அப்படியிருக்கப் பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படிச் சொல்லுகிறாய்? நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா" (யோவான் 10:9,10)

என்றார்.

இயேசுக் கிறிஸ்து அதரிசனமான தேவனுடைய தற்சொரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்.

(கொலொசெயர் 1:15)

ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரண மெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது.

(கொலொசெயர் 2:9)

"வாக்யோ பிரம்ஹ"

வார்த்தையாயிருந்த தேவன் மாம்சமாகி நமக்குள்ளே வாசம் செய்யும்படி உலகிற்கு வந்தபோது, அவரை ஏற்றுக் கொண்ட சீடர்களால் அவருடைய மகிமையைக் காண இயன்றது. (யோவான் 1:14)

குரு கீதையிலும் இதே பொருளைக் காணலாம்.

குரு ராதிர் அனாதிஷ்ச்சா - குரு பரம தெய்வம்
குரு ஆதி - குருவே ஆரம்பம்
குரு அனாதி - குருவே ஆரம்பமில்லாதவர்
அவரே சர்வ வல்லமையுள்ள தேவன்.

(குரு கீதை 1:79)

## 3. குருவே மேலான வழி

(குரு ரேவ பரகதி)

கதி என்னும் வார்த்தை வழி என்று பொருள்படும். பரகதி என்னும் போது அதை மேலான இலக்கு என்றும் கொள்ளலாம். இலக்கையடைய வழி வேண்டும். வழியினுடைய முடிவு இலக்காகும். இலக்கையடைய வழியில் பிரயாணம் செய்ய வேண்டும்.

நானே வழியும் சத்யமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலே யல்லாமல் பிதாவினிடத்தில் ஒருவனும் வரான் (யோவான் 14:6) என்று இயேசு சொன்னார்.

இப்படிப்பட்ட வாக்கைக் கொடுக்கக் காரணம், அவர் தான் வழி. அவரே பிதாவினிடத்திலிருந்து இறங்கி வந்தவர்.

பரலோகத்தினின்று இறங்கின வரும் பரலோகத்திலிருக் கிறவருமான மனுஷ குமாரனே யல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை.

(யோவான் 3 : 13)

என்று இயேசு சொன்னார்.

நித்திய இராஜ்ஜியம் சென்றடைய புருஷனாகிய தெய்வத்தையறிவதே வழி என்பதை ஏற்கெனவே உபநிஷத்துக்கள் மூலம் அறிவோம்.

இந்த வழியானது பரலோகத்தையும் பூலோகத்தையும் இணைக்கிறது. இதனுடைய விளக்கம் என்னவெனில், பரலோகத்திலுள்ள சர்வ வல்லமையுள்ள தேவனையும் பூமியிலுள்ள மனிதனையும் இந்த வழி ஒன்றுபடுத்துகிறது.

எனவே, புருஷனாகிய இயேசுக் கிறிஸ்து பரலோகத்திற்கும் பூமிக்கும் இடையில் இரண்டையும் இணைக்கும் சமாதானப்பாலம் ஆகிறார்.

இயேசு உலகத்தில் பிறக்கப் போகிற செய்தியை அறிவித்த தூதர்கள் :

"உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும் மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக"

(லூக்கா 2:14)

என்று சொல்லித் துதித்தார்கள். அவர் பிரஜாபதி பலியை நிறைவேற்றி மரித்து உயிர்த்தெழுந்த பின்பு தனது சீடர்களைப் பார்த்து :

"உங்களுக்குச் சமாதானம்" (யோவான் 20:20:21:26)

என்றார்.

"காலங்கள் நிறைவேறும் போது விளங்கும் நியமத்தின் படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவை களுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்பட வேண்டும்." (எபேசியர் 1:9)

என்று பவுல் அப்போஸ்தலர் கூறினார்.

இயேசுக் கிறிஸ்து சமாதானப் பாலமாகப் பரலோகத்தையும் பூமியையும் இணைத்து அதன் வழியாக நாம் தேவனுடைய நித்திய இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்கும் படி மேலான வழியாய் இருக்கிறார்.

உப நிஷத்துக்கள் சொல்லுகிறபடி குருவே வழி, இயேசுக் கிறிஸ்து தானே குரு என்றும் வழி என்றும் திட்டவட்டமாகக் காண்பித்தார். முக்தியடைய வேறு குருவோ வழியோ இல்லை.

நண்ய பந்த்தா வித்யதே அயனாய
(ஸ்வேதாஸ்வதார உபநிஷத்து)

பொருள் : இதைத்தவிர வேறு வழியில்லை.

## 4. குருவே மேலான ஞானம்

(குரு ரேவ பரா வித்ய)

வித்ய என்பது ஞானத்தைக் குறிக்கும், வித்யா, வேதா ஆகிய சமஸ்கிருத வார்த்தைகள் வித் என்ற சொல்லிலிருந்து பிரிந்து வளர்ந்தவைகளாகும். வித் என்றால், அறிய, கற்றுக் கொள்ள, விளங்கிக் கொள்ள என்று பொருள்படும். வேதங்களில் வித்யா என்பது முக்கிய வார்த்தையாகும். வித்யா என்ற வார்த்தைக்கு எதிர்மறையாகக் காணப்படுவதெல்லாம், அவித்யா என்னப்படும். அவித்யாவைப் பின்பற்றுகிற யாவரும் காரிருளாகிய மரணத்தில் இருக்கிறார்கள். ஆனால் வித்யா நமக்கு நித்ய ஜீவனை அளிக்கும்.

அவித்யயா ம்ருத்யும் - தீர்த்வா
வித்யயா அம்ருதாமஸ்னதே

(ஈ ஸாவாஸ்யோபநிஷத்து - 11)

மெய் ஞானம் என்பது நித்ய ஜீவனுக்கு வழியாகவுள்ள புருஷனாகிய தெய்வத்தை அறிவதே! இந்த ஞானத்தை உபநிஷத்துகள் மேலான ஞானம் என்று சொல்லுகின்றன. இந்த மேலான ஞானத்தைக் குருவே அளிப்பார். குருரேவ பராவித்யா என்று சொல்லப்படுவதினால் குருவும் வித்யாவும் ஒரே ஆள் தான். குரு அளிக்கும் இந்த ஞானமானது குரு இன்றித் தானே நிற்கும் தத்துவமோ, கொள்கையோ அல்ல. குரு அளிக்கும் இந்த ஞானம் என்பது அவரையே நமக்கு அளிப்பதான அல்லது வெளிப்படுத்துவதான ஞானமாகும்.

புதிய ஏற்பாட்டில் இதைக்குறித்துப் பரிசுத்த ஆவியானவர் சொல்லியிருப்பதைக் கவனியுங்கள்.

இயேசுவே தேவனால் நமக்கு ஞானமானார்.

(1 கொரிந்தியர் **1:31**)

இயேசுவுக்குள் ஞானம், அறிவு என்ற பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது. (கொலோசெயர் 2:3)

கிறிஸ்துவைக் குறித்து அறியும் ஞானம் தேவனுடைய மர்மம், இது உலகின் எல்லா ஞானத்திற்கும் மேம்பட்டது. இந்த மர்மத்தைக் குறித்து பவுல் அப்போஸ்தலர் எழுதுவது:

என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன். (பிலிப்பியர் 3:8) என்றார்.

இப்படிச் சொன்னவர், மேலும்,

“நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்து கொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருள வேண்டுமென்று” (எபேசியர் 1:17) என்று நமக்காக வேண்டிக் கொள்கிறார்.

இயேசுக் கிறிஸ்துவே பரா வித்யா (மேலான ஞானம்) அவரைப் பின்பற்றுவது நித்ய ஜீவனாகும். உலகத்திற்கு அளிக்கக்கூடிய நற்செய்தி இதுவே.

## 5. குருவே மேலான யாத்திரை

(குருரேவ பராயணம்)

அயனம் என்பது நட அல்லது செல் என்று பொருள்படும். பர + அயணம் என்பது பராயணம் என்றாயிற்று. புகழ் பெற்ற இதிகாசக்காவியமான இராமாயணம் என்பது இராம + அயணம் என்பதாகும். அதாவது இராமனுடைய பயணம் அல்லது யாத்திரையாகும்.

ஆனால் பராயணம் என்னும் வார்த்தையில் பர என்பது ஒரு மனுஷனைக் குறிக்காது. இங்கே அது மேலான அல்லது உயர்ந்த என்று பொருள்படும். எனவே, இதை மேலான பயணம் அல்லது யாத்திரை எனலாம்.

உபநிஷத்துக்களின் கருத்துப்படி மேலான யாத்திரை குருவே!

பரிசுத்தமான நிஷ்களங்கபுருஷனை முனிவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் வேளையில் அவரைப் பின்பற்றிச் செல்லும்படியான உயர்ந்த முன்மாதிரியை அவரிடத்தில் எதிர்பார்த்தனர். ஜனங்கள் பின்பற்றி நடப்பதற்கு இயேசுவே நல்ல முன்மாதிரியாவார். கற்றுக் கொள்ளும்படிக்கு இயேசுவின் சீடர்கள் அவருடன் நடந்தனர். மேலான குருவாகிய இயேசு, முதலாவது தான் நடந்து, தம்மைப் பின்பற்றுகிற சீஷர்களைத் தமது அடிச்சுவட்டில் நடந்து வரும்படி அவர்களுக்கு மாதிரியைப்பின் வைத்துப் போனார்.

இயேசுக் கிறிஸ்துவின் மலைப்பிரசங்க உபதேசத்திற்கு முன்பு "உன் சத்துருவை நேசி, அவனுக்காக ஜெபம் செய்" என்கின்ற உபதேசத்தை உலகம் கேட்டதில்லை. (மத்தேயு 5:43,44) தனக்கு இழைக்கப்பட்ட கொடுமையான சிலுவை மரண நேரத்திலும் அவர் சத்துருக்களை நேசித்தார். அவர்களுக்காக ஜெபம் செய்தார். தன்னைக் காட்டிக் கொடுப்பவன் இன்னான் என்று தெரிந்தபின்னரும் அவனுட்பட எல்லா சீடர்களின் கால்களையும் கழுவினார். கழுவினதுடனல்லாமல், "நான் உங்களுக்குச் செய்தது போல நீங்களும் செய்யும் படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்" (யோவான் 13:15) என்றார்.

இயேசு தாம் வாயால் உபதேசித்தவைகளைக் கொல்கோதாவின் சிலுவை மரணம் வரைக்கும் கடைப்பிடித்தார். அவரைப்பின்பற்றுகிற சீடர்கள் அவருக்குத் தங்களை

முழுமையாக ஒப்புக்கொடுத்தால் அவரைப் போன்ற கனிகளைப் பெறலாம். குரு இல்லாமல் சீடன் ஒன்றும் செய்ய இயலாது.

"என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்ய இயலாது" (யோவான் 15:5)

என்று இயேசு சொன்னது எவ்வளவு உண்மை.

எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாய் நிறுத்தும் படிக்குத் தேவன் சித்தமுள்ளராகி அவரையே அறிவித்து, புத்தி சொல்லி, எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறார்.

குரு எப்பொழுதும் குருவாகவே இருப்பார். சீஷன் எப்பொழுதும் அவருடன் நடப்பானேயன்றி அவன் ஒரு போதும் குருவாக மாட்டான். அவருடன் சேர்ந்து நடக்கும் வரை அவன் குருவைப்போல இருப்பான். சற்று விலகி நடந்தால் மரத்திலிருந்து ஒடிந்து விழுந்த கிளையைப் போல இருப்பான்.

**அவ்யக்தா (உள்ளானமனுஷன்) என்பது என்ன?**

கதோபநிஷத்து 3 : 10, 11 மற்றும் 6: 7, 8 ஆகிய வாக்கியங்களில் சொல்லப்பட்டபடி அவ்யக்தா என்று அழைக்கப்படுகிற உள்ளான மனுஷன் என்பவன் ஆத்மாவிலும் உயர்ந்தவனாகவும் புருஷனாகிய தேவனுக்குக் கீழானவனாகவும் காணப்படுகிறான்.

இந்த மர்மமான மனுஷன் இயேசுக் கிறிஸ்துவின் சிலுவைப் பலிக்குப் பின்பு அவருடைய இரத்தத்தினாலாகும் பாவ மன்னிப்பைப் பெற்றவர்களுக்கு வெளிப்பட்டானேயன்றி முக்காலத்திலுள்ள ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் வெளிப்படவில்லை. எனவே அக்கால ரிஷிகள் "அவ்யக்தா" என்று எழுதிவிட்டார்கள். இயேசுவைக் குருவாக ஏற்றுக் கொண்டவனோ. உள்ளான மனுஷனைக் கண்டுவிட்டதினால் அவன் கிறிஸ்துவில் வளரவும், புறம்பான மனுஷன் நாளுக்கு

நாள் அழியவும் தக்கதாக இயேசுவின் அடிச்சுவட்டில் நடக்கிறான்.

அப்படி நடக்க தன்னை கொடுக்கிற படியினால் அவன் தேவனுடைய பிள்ளை என்ற பெயரையும் பெறுகிறான்.

> "நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள் உலகம் அவரை அறியாத படியினாலே நம்மையும் அறியவில்லை. இப்பொழுது நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம். இனி எவ்விதமாயிருப்போமென்று. இன்னும் வெளிப்படவில்லை. ஆகிலும் அவர் வெளிப்படும் போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்.
>
> (யோவான் 3 : 1, 2)

மேற்கண்ட வசனங்களில், இயேசுவை ஏற்றுக் கொண்டவர்களின் இப்பொழுதுள்ள நிலை வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

இனி எவ்விதம் இருப்போம் என்பது இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை. ஆனால் இயேசுவை முகமுக-மாய்ச் சந்திக்கும் போது அவரைப் போலவே இருப்போம் என்று வசனம் சொல்லுகிறது. நாம் அவரைப் போல மறுரூபமாவோம் என்பது இதன்பொருளாகும். அந்தநாளில் இது நடக்கும்.

இயேசுக் கிறிஸ்துவின் சிலுவை மரணத்திற்கு முன்புள்ள முனிவர்களுக்கு இக்காரியம் வெளிப்படுத்தப்படவில்லை. என்றாலும் மனிதனுடைய பூரணப்படுதலைக் குறித்து தேவன் அவர்களுக்கு வெளிப்படுத்தின போது, அது அவர்களுக்குச் சரியாக விளங்காததினால் அதை உள்ளான மனுஷன் (அவ்யக்தா) என்று அழைத்தனர்.

இதைக் குறித்துப் பேதுரு அப்போஸ்தலர் எழுதும் போது:

அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்பு கூறுகிறீர்கள். இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்துச் சொல்லி முடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய்க் களிகூர்ந்து உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்தும இரட்சிப்பைப் பெறுகிறீர்கள். உங்களுக்குண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்க தரிசனஞ் சொன்ன தீர்க்க தரிசிகள். இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனை பண்ணினார்கள்.

தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும் அவைகளுக்குப்பின் வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்ன காலத்தைக் குறித்தா ரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள்.

தங்கள் நிமித்தமல்ல, நமது நிமித்தமே இவைகளைத் தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது. பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக் கொண்டு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது. இவைகளை உற்றுப் பார்க்கத் தேவதூதரும் ஆசையாய் இருக்கிறார்கள்.

ஆகையால், நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக் கொண்டு, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து இயேசுக் கிறிஸ்து வெளிப்படும் போது, உங்களுக்கு அளிக்கப்படும் கிருபையின் மேல் பூரண நம்பிக்கை யுள்ளவர்களாயிருங்கள்.

நீங்கள் முன்னே உங்கள் அறியாமையினாலே கொண்டிருந்த இச்சைகளின்படி இனி நடவாமல் கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருந்து,. உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல, நீங்களும் உங்கள் நடக்கைகள் எல்லாவற்றிலேயும், பரிசுத்தராயிருங்கள். (I பேதுரு *1 : 8 - 15*)

"அவ்யக்தா என்ற வார்த்தையை விளங்கிக் கொள்ள வேண்டுமாயின் மேலே கண்ட வசனங்களைத் தியானித்தாலே போதும்.

## ஒரே வழியா? பல வழிகளா?

இரட்சிப்புக்குப் பல வழிகள் உண்டு என்றே இந்து தத்துவங்கள் போதிக்கின்றன. ஆறுகள் எங்கெங்கேயோ ஓடி முடிவில் சமுத்திரத்தை அடைவது போல ஆன்மாக்கள் எந்த மதத்தில் எப்படி வழிபட்டாலும் முடிவில் அந்த ஒரே இறைவனிடம் போய்ச் சேர்வார்கள் என்றும், பசுக்கள் பல நிறமானாலும் பால் வெள்ளையாய் இருப்பது போல, மதங்கள் வெவ்வேறு கொள்கைகளையுடையனவாயிருந்தாலும் இறைவன் ஒருவரே என்றும் பலவாறு பேசித் தங்களையும் மற்றவர்களையும் திருப்திப்படுத்திக் கொள்வதுண்டு.

இந்து மதம் சகிப்புத்தன்மையுடையது என்றும் அது பரந்த மனப்பான்மையுடன் பிற மதங்களின் கருத்துக்களையும் ஏற்றுக் கொள்ளும்தன்மையுடையது என்றும் சொல்லுவார்கள்.

இந்தியாவின் முதல் பிரதான மந்திரியாக இருந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், இந்துமதமானது ஒழுங்கற்றதும், நிச்சயமற்றதும், எப்பக்கத்திலும் சார்ந்ததும், யாருக்கும் எப்படி வேண்டுமானாலும் கொள்ளத்தக்க விசுவாசத்தையுடையது என்று கூறியிருக்கிறார்.

இயேசுவும் ஒருகடவுள் என்று ஏற்றுக் கொள்ள இந்துக்கள் தயங்குவதில்லை. இயேசு ஒருவரே இரட்சிப்புக்கு வழி என்றால் அதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

நித்திய ஜீவனைக் குறித்து அதைப் பெறுவதற்கான இரட்சிப்பின் வழியைக் குறித்தும் வேதங்களும் உபநிடதங்களும் சொல்லும் சில காரியங்களைப் பார்ப்போம்.

வேதாக மேத்தம் புருஷம் மஹான் தம் ஆதித்ய
வர்ணம் தமஸாஹ் பரஸ்தாத் தமேவ விதித் வதி
ம்ருதுமேதி நன்ய பந்தா வித்யதே அயநாய

(ஸ்வேதாஸ்வதார உபநித்து 3:8
யஜுர் வேதம் 31:18)

பொருள்: இருளுக்கும் அப்பாலுள்ள சூரியனைப் போன்ற ஒளியுள்ள வல்லமை நிறைந்த புருஷனை நான் அறிவேன். அவனை அறிவதின் மூலமே மரணத்தினின்று கடந்து போக இயலும். அதைத்தவிர வேறு வழியே இல்லை.

புருஷ சூக்தத்தின் கடைசி பாகத்திலும் இதே போன்ற வாக்கியத்தைக் காணலாம். இவ்விரண்டு இடங்களிலும் புருஷன் இருளைக் கடந்த நிலையில் சூரியனாக நிற்கிறான். சுருங்கச் சொல்லின் புருஷன் இருளை அகற்றும் ஒளியாய் இருக்கிறான்.

தமேவ வித்வான் அம்ருத இஹ பவதி
நன்ய பன்த்தா அயநாய வித்யதே

என்ற புருஷசூக்தப் பாடலிலும் அப்படியே காண்கின்றோம்.

இறைவனையடைய மேலான வழி அல்லது பரகதி என்னவெனில் புருஷனை அறிந்து கொள்ளுதலே. ஏனெனில் புருஷ சூக்தத்தின் மொத்த சாராம்சமும் மனித ஆத்மா பாவத்திலிருந்து விடுதலை பெறப்புருஷன் பலியாக்கப்படல் வேண்டும் என்பதுவே. இதைத்தவிர வேறு பரகதி அல்லது மேலான வழி மனுக்குலத்துக்கு எதுவும் இல்லை என்பது சகல வேதங்களிலும் தெளிவாக எழுதப்பட்டுள்ளது.

ஆனால் வேத காலங்களுக்கடுத்து கர்மா, ஞானா, யோகா, பக்தி ஆகிய நான்கு வழிகள் மூலம் முக்தி அல்லது இரட்சிப்பு அடையலாம் என்ற கொள்கை எழலாயிற்று. இவைகளையும் ஆராய்ந்து பார்ப்பது நல்லது.

**கர்ம மார்க்கம்**

கர்மம் என்றால் வேலை, செயல் அல்லது செய்கை என்று பொருள்படும். இரட்சிப்புக்குக் கர்ம மார்க்கமே சிறந்தது என்று நம்புகிறவர்கள் பலர். கர்ம மார்க்கத்திலேயே சிறந்தது பலி. எனவே கர்மமார்க்கம் என்பது பலி மார்க்கம் என்றும் கொள்ளலாம்.

மனிதன் பிறந்தவுடனே மரணத்துக்குக் கடனாளியாகப் பிறக்கிறான் என்றும் அவன் பலி செலுத்தும் பொழுது தன்னை மரணத்தினின்றும் விடுவித்துக் கொள்கிறான் என்றும், வேதகாலத்தில் பலியானது இரட்சிப்புக்கான உயர்ந்த அடையாளமாக இருந்தது என்றும் பலியினால் முதலாவது மரணத்தினின்றும் பின்பு பாவத்தினின்றும் விடுதலை கிடைக்கிறதென்றும் நம்பினார்கள் என்று தவமணி அவர்கள் சொல்லுவார்கள். (எம். தவமணி - ஸத்பதபிராமணம் 3-6-2-6).

பலிமார்க்கத்திலிருந்து பிரிந்து வந்தது கர்மமார்க்கமாகும். இரட்சிப்புக்காகப் பலி செலுத்தப்பட்டு வந்தது. வேதங்களிலும் பழைய ஏற்பாட்டிலும் சொல்லப்பட்ட பலிகள் யாவும் நிழல் போல் காட்டப்பட்டவை. உலகம் தோன்றுமுன்னே புருஷ பிரஜாபதி பலியாக்கப்பட்டதை புருஷ சூக்தத்தில் காணலாம். இப்படிப்பட்ட பலியானது இயேசுக்கிறிஸ்துவில் முழுமையடைந்து நிறை வேறியது. மனிதன் இதற்கு மேல் பரிபூரணமான ஒரு பலியைச் செலுத்த இயலாது. இயேசு கிறிஸ்து தன்னையே பழுதற்ற பூரண பலியாக ஒப்புக் கொடுத்து பாவிகளாகிய நாம் நித்திய ஜீவனையடைய ஏதுவானார்.

இந்தப் புருஷனைத் தவிர வேறு வழி இல்லை (வேதாக மேத்தம் ....... நன்ய பந்த்தா அயநாய வித்யதே) என்றே உபநிடதங்களும் சொல்லுகின்றன.

இந்தப் புருஷ பிரஜாபதியின் பூரணமான பலியை அறியாமல் அனேகர் நற்காரியங்களைச் செய்ய முயலுகிறார்கள். பைபிள் சொல்லுவது போல, நம்முடைய நீதியெல்லாம் அழுக்கான கந்தை (ஏசாயா 64 : 6) புருஷனுடைய ஆவியில்லாமல் ஒருவரும் நற்காரியங்களைச் செய்ய இயலாது. என்னாலன்றி உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது (யோவான் 15 : 5) என்று இயேசுக் கிறிஸ்து சொன்னார். வானத்திலிருந்து பூமிக்கு இறங்கி வந்த அந்த மரத்துடன் நாம் இணைந்து நிற்போமானால் நல்ல கனிகளைத் தர இயலும்.

## கர்மா கொள்கையின் மற்ற விளைவுகள்

பலிமார்கத்திலிருந்து கர்மா என்ற கொள்கை, ஏற்பட்ட போதிலும் அனேக மற்ற கொள்கைகள் பிற்காலத்தில் தோன்றி சில விளைவுகளை ஏற்படுத்துகின்றன. இயேசுக் கிறிஸ்து சிலுவையில் பலியாக்கப்பட்ட போது சொன்ன 'முடிந்தது' என்ற ஒரே வார்த்தையில் எல்லாம் முடிந்தது. இதற்கு மேல் மனிதன் தன் சொந்த முயற்சியினால் இரட்சிப்புக்கு வழிதேட வேண்டிய அவசியமில்லை.

நற்கிரியைகளைச் செய்வதற்காக நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கையா-யிருக்கிறோம். (எபேசியர் 2 : 10)

**2. ஞான மார்க்கம்**

கர்மனா பந்த்யதே ஜன்தூர் வித்யயா து பிரமுச்யதே
(சாந்திபர்வம் - மஹா பாரதம்)

கர்மா ஆத்மாக்களைக் கட்டி வைக்கிறது
ஞானம் அவைகளை விடுவிக்கிறது.

நமக்காகப் பலியான புருஷனை அறிந்து கொள்ளுதலே ஞானம் என்று வேதங்களும் உபநிஷத்துக்களும் சொல்லுகின்றன. புருஷனே பரவித்யா (மேலான ஞானம்)வாக இருக்கிறார். மேலான வழியில் நடந்து இலக்கையடைய மேலான ஞானமாகிய புருஷனை அறிவதே ஞான மார்க்கமாகும்.

### 3. யோக மார்க்கம்

யோகா என்ற வார்த்தை யூஜ் என்ற சமஸ்கிருத மொழியிலிருந்து வந்ததாகும். இணைக்கப்படுதல், சேர்தல் என்பதே அதன் பொருள். வி.எஸ். ஆப்தே என்பவர் சமஸ்கிருதம் - ஆங்கிலம் பொருளகராதியில் இவ்வார்த்தைக்கு இன்னும் பல பொருட்களைக் கூறுகிறார். ஆழ்நிலை தியானம், சிந்தையை ஒருநிலைப் படுத்துதல், மேலான உயர்நிலை, ஆவியிடம் ஒருமனப்படுதல் போன்ற பொருள்களையும் சொல்லுகிறார். வேதங்களிலும் உபநிடதங்களிலும், யாரிடம் இப்படிச் சிந்தையை ஒரு நிலைப்படுத்தித் தியானிப்பது என்று கேட்டால் கிடைக்கும் ஒரே ஒரு விடை "புருஷனிடம்" என்பதுவே. தியான நிலைகளைக் குறித்து வேதங்கள் மூன்று விதமான காரியங்களைச் சொல்லுகின்றன.

1. ஸ்ரவன - குருவிடமிருந்து கடவுளைப் பற்றி அறிதல்.
2. மனன-கேட்டவைகளைக் குறித்துத் தியானிப்பதும் தக்க வைத்துக் கொள்ளுதலும்.
3. நிதித்யாசன - தொடர்ச்சியாகவும் கவனமாகவும் கடவுளின் வார்த்தைகளைத் தியானிப்பதும் அவரில் நிலைத்திருப்பதும்.

பைபிளிலும் இப்படிப்பட்ட கட்டளைகள் உண்டு. சங்கீத புத்தகத்தின் ஆரம்பத்திலேயே.

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். (சங் 1:2)

சங்கீதங்களை எழுதின அனைவருமே தியானம் செய்கிறவர்கள். ஆசாப் என்பவர்.

உம்முடைய கிரியைகளை யெல்லாம் தியானித்து உம்முடைய செயல்களை யோசிப்பேன். (77 : 12)

என்றார். தாவீது அரசன் வனாந்தரங்களில் அலையும் போது கர்த்தருடைய வேதத்தைத் தியானித்தான்.

நிணத்தையும் கொழுப்பையும் உண்டது போல என் ஆத்மா திருப்தியாகும். என் வாய் ஆனந்தக்களிப்புள்ள உதடுகளால் உம்மைப் போற்றும். என் படுக்கையின் மேல் நான் உம்மை நினைக்கும் போது இராச் சாமங்களில் உம்மைத் தியானிக்கிறேன். (சங் 63: 5, 6)

## தற்கால ஆழ் நிலை தியானங்களும் யோகிகளும்

இன்றைய ஆழ்நிலை தியானக் காரர்கள் தியானத்தின் மையப் பொருளாகிய புருஷனை இழந்து விடுவதால் இலக்கை நோக்கித் தொடருகிறார்கள் என்று சொல்ல இயலாது. தற்கால தியானங்கள் வேதத்திற்கு எதிர் திசையில் செல்லுகின்றன. ஏனெனில், வேதங்கள் சொல்லுவது என்ன வெனில் முழு சிந்தையோடும், அறிவோடும், ஆத்மத் தோடும் புருஷனைத் தியானிக்க வேண்டும். என்பதே! ஆனால் தற்கால தியானக்காரர்கள் ஒன்றுமில்லாததைத் தியானிக்கிறார்கள். சுருங்கச் சொன்னால் இவர்கள் ஜனங்களின் சிந்தையை வெளியேற்றுகிறார்கள்.

அமெரிக்காவில் பத்தாயிரத்திற்கும் அதிகமானவர்கள் இந்த ஆழ்நிலை தியானங்களைச் செய்து வருகிறார்கள். ஜொஷ் மக்கோவல் என்பவர் : "வட அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் நான் பிரயாணம் செய்கையில் கிழக்கு நாடுகளிலுள்ள இந்த ஆழ் நிலைதியானம் எப்படி இங்கெல்லாம் வெடித்திருக்கிறது என்பதைக் காண முடிகிறது. எந்தக் கல்லூரிக்குச் சென்றாலும்

ஆங்கே TM (ஆழ்நிலை தியானம்) குறித்ததான விளம்பரங்களைக் காணலாம்" (Josh MeDowell, From the Forward of the Mystical maze-Ibid)

வட அமெரிக்காவுக்கு இவ் வாழ்நிலை தியானத்தை அறிமுகப்படுத்திய மகரிஷி மகேஸ் யோகி சொல்லுவது என்னவெனில் : "இரட்சிப்பு அடைவதற்கும் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கும் ஆழ்நிலை தியானத்தை விட்டால் வேறு வழியே இல்லை" (The Mystical Maze-Ibid rang 131) வட அமெரிக்காவின் அனேக பத்திரிக்கைகள் மகரிஷியைக் குறித்தும் அவருடைய ஆழ்நிலை தியானத்தைக் குறித்தும் அனேக செய்திகளை வெளியிட்டுள்ளன. சமீபத்தில் (மகரிஷி சிறையாக்கப்படுவதற்குமுன்) உலகின் எல்லா அரசாங்கத் தலைவர்களையும் மகரிஷி அழைத்து தன் ஆழ்நிலை தியானத்தின் மூலமாக இவ்வுலகிலேயே பரலோகத்தைக் காட்ட விரும்பினார். (From Maclean's (Canada's weekly News magazine, Toronto march 26, 1990) This article appears various news medias of America. In this article the Governments are invited to contact : Maharishi World Capital of the age of Englightenment, Maharishi, Nagar 201 304, (U.P. INDIA)

## ஆழ்நிலை தியானத்தின் இரகசியம்

மகரிஷி அவர்கள் ஆழ்நிலை தியானத்தின் மூலமாக இரட்சிப்பையும் பரலோகத்தையும் இங்கேயே அருளுகிறார். இது மிகவும் வசீகரிக்கக் கூடிய செய்தி! ஆழ்நிலை தியானம் தற்காலிகமாக பாவத்தினால் ஏற்பட்ட குற்றவுணர்வையும் வேதனையையும் குறைக்கிறது.

"ஆழ்நிலை தியானமானது ஒவ்வொருவருடைய வாழ்விலும் ஏழு விதமான மனவுணர்வுகளை உண்டாக்கி அதன் மூலம் பூரண மனிதத் தன்மையையும், இயற்கைச் சட்டத்தின் மூலமாகத் தான் விரும்பிய யாவற்றையும் பெற்றுக் கொள்ள உதவி செய்கிறது. இவ்வேழு நிலைகள் என்னவெனில் :

| | | |
|---|---|---|
| 1. | ஜாக்ரத சேத்தனா | நடத்தல் |
| 2. | ஸ்வப்ன சேத்தனா | கனவு காணுதல் |
| 3. | சுசுப்தி சேத்தனா | துயில் கொள்ளுதல் (நித்திரை கொள்ளுதல்) |
| 4. | தூர்யசேத்தனா | ஆழ்நிலை உணர்வு |
| 5. | தூர்யதீத் சேத்தனா | உணர்வு |
| 6. | பகவத் சேத்தனா | இறை உணர்வு |
| 7. | பிரம்மி சேத்தனா | இணை யுணர்வு |

(Maharishi Magesh Yogi, Maharishi's Master Plan to create Heaven on Earth (Reconstruction of the Whole world) taken from the summary of the book from the Maclean's (March 26, 1990)

மேலே குறிப்பிடப்பட்ட ஏழு காரியங்களும் வேதங்களிலோ, உபநிஷத்துக்களிலோ காணப்படவில்லை. ஆனால் மகரிஷியின் விளம்பரங்கள் யாவும் இவைகளை மகரிஷியின் வேத விஞ்ஞான இயல் (Vedic Science) என்றே விளம்பரப்படுத்துகின்றன.

இவ்வேழு தியான நிலைகளும் ஒரு மனிதனின் வாழ்க்கையில் நடைபெற்றால், அவன் தன்மன பாரங்களிலிருந்து சிறிது நிவாரணம் பெறலாம். ஆனால் இம்மன பாரங்கள் எப்படி எதினால் ஏற்பட்டன என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

மன பாரம் அல்லது வேதனையென்பது பாவத்தினால் ஏற்படும் விளைவு என்பதை உணரவேண்டும் ஆழ்நிலை தியானம், ஒரு நோயாளி தன் வேதனையை உணராமலிருக்கக் கொடுக்கப்படும் மாத்திரையைப் போலக் கிரியை செய்கிறது. சில மன இயல் மருத்துவர்கள் தங்கள் நோயாளிகளை இவ்வாழ்நிலை தியானத்தைச் செய்யும் படியாக ஆலோசனை கொடுக்கிறார்கள்.

இந்த ஆழ்நிலை தியானம் எவ்வாறு வேலை செய்கிறதென்றால் :

ஜாக்ரத சேத்னா என்ற நடக்கின்ற உணர்விலே ஒருவன் ஆழ்நிலை தியானத்திற்குப் போகிறான். இவனுக்கு சமாதானம் கிடையாது. நல்ல இளைப்பாறுதல் இல்லை. மனவேதனையும் பாரமும் இருக்கிறதென்று வைத்துக் கொள்வோம். நிவாரணம் கிடைக்கும் என்று இவன் T.M.க்குப் போகிறான். தன் சிந்தனையில் வேதனையை உணருகிறான். இந்த உணர்வு கற்பனையல்ல. உண்மையே. இந்த வேதனையும் உணர்வுகளும் உண்மையான வியாதியான பாவத்தின் அடையாளங்கள். எனவே இவன் தனக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் இடத்தைத் தேடிப் போகிறான். எப்படியாவது இவ்வேதனையிலிருந்து விடுதலை கிடைத்தால் போதும் என்று போகிறான். ஆழ்நிலை தியானம் மகரிஷி அவர்களின் கோட்பாட்டின்படி, இவனை ஸ்வப்ன சேத்தனா என்ற நிலைக்குள் வழி நடத்துகிறது.

முதலாவது நிலையில் அவன் மனமானது விழிப்புள்ளதாய் இருக்கிறது. இரண்டாவது நிலையில் அவன் மனமானது மயக்க நிலையில் அரைத் தூக்கத்தில் இருக்கிறது என்றாலும் அவன் சிந்தையானது கனவிலும் வேலை செய்யும். இங்கே இவனுடைய மனமானது இனிய அல்லது கொடூரமுள்ள அனுபவத்தைக் கனவு காண்கிறது. ஆயினும் இரண்டும் உண்மையல்ல. (மெய்ப்பொருளைத் தேடுகின்ற உண்மையான மக்கள் பொய்மையிலிருந்து மெய்மைக்குள் வழி நடத்தும் படியாகவே பிரார்த்திக்கின்றனர்) இந்த இரண்டாவது நிலையிலும் இவன் மறைமுகமாக அவ்வேதனையை உணரவே செய்கிறான். எனவே ஆழ்நிலை தியானமானது இப்போது சுசுப்தி (ஆழ்துயில்) என்ற மூன்றாவது நிலைக்கு வழி நடத்துகிறது. இந்நிலையில் இவன் தன் பாவத்தினால் ஏற்பட்ட வேதனையை அதிகமாய் உணர்வதில்லை. நாம் ஆழ்ந்த நித்திரை

செய்யும் போது நமது அனேகக்கவலைகளை மறந்து விடுகிறோம். ஆழ்ந்த நித்திரையில் நமது மனம், அறிவு அதைச் சேர்ந்த அவயவ உறுப்புகள் யாவும் நல்ல ஓய்வு எடுக்கின்றன. ஆழ்நிலை தியானம் இயற்கையான நித்திரை இல்லாவிட்டாலும் இம் மூன்றாவது நிலையாகிய ஆழ்துயில் நிலைக்கு வழி நடத்துகின்றன.

எப்படியாயினும் மனிதன் தன் குற்றவுணர்விலிருந்து அமைதி காணவே இயலாது. நித்திரையிலிருந்து அவன் எப்படியும் எழுந்திருக்கவே வேண்டும். ஆனால் ஆழ்நிலை தியானம் மூன்றாவது நிலையிலிருந்து மற்ற நான்கு நிலைகளுக்கும் தொடர்ச்சியாக வழி நடத்துகிறது. கடைசி நிலையாகிய இறை உணர்வு நிலைக்கு அவன் வரும்போது நூறு சதவிகிதம் தான் தெய்வீக நிலையடைந்துவிட்டதாக நினைக்கச் செய்கிறது. இந்நிலையில் அவன் தன்னைக் கடவுள் என்றே நினைக்கிறான். இப்படியாக ஆழ்நிலை தியானமானது இந்து மார்க்கத்தின் ஒரு பிரிவாகிய சம்கியா, வேதாந்தம் என்ற தத்துவங்களுக்குள் வழி நடத்துகிறது.

ஆனால் மனிதன் உண்மையை உணர வேண்டும். தன் ஆன்மாவில் ஏற்படும் வேதனையை அவன் அடக்க இயலாது. அவன் தன் பழைய நிலைக்குத் திரும்பும் பொழுது மறுபடியும் அவ்வேதனைகளை உணரவே செய்வான் அன்றோ! இதினாலேயே ஆழ்நிலை தியானத்தை நாள் முழுவதும் செய்ய வேண்டும் என்று சொல்லித் தருகிறார்கள். ஆழ்நிலை தியானம் மனிதனின் வேதனைகளை நீக்குகிறது உண்மையானால் அவன் அதை வாழ்நாள் முழுவதும் செய்ய வேண்டிய அவசியம் என்ன? அவன் எப்பொழுதும் ஆழ்நிலை தியானத்திலே இருந்தால் மற்ற காரியங்களைச் செய்வது எப்படி? அவன் தன் சுய நிலைக்குத் திரும்பும் போது மறுபடியும் அப்பாவவுணர்வு அவனை வேதனைப்படுத்துகிறதல்லவா? சாதாரணமாக, பைத்தியக்காரர்கள் கூட மரணமடையும் வேளைக்குச் சற்று

முன்னதாக சுயநினைவுக்கு வருவது இயற்கை. அப்படியிருக்கும் போது ஆழ்நிலை தியானக்காரர்கள் எவ்வளவுதான் தியான நிலையில் இருந்தாலும் மறுபடியும் சுயநினைவுக்குத் திரும்பும் போது அதே பாவ வேதனையுணர்வு ஏற்படுமல்லவா? எனவே ஆழ்நிலை தியானம் என்பது மனுக்குலத்தின் வேதனையை போக்கக்கூடியதல்லவென்றும், அது குணமாக்க இயலா புற்று நோயாளிக்கு வேதனையை மறக்கச்செய்யக் கொடுக்கப்படும் ஒரு மாத்திரையைப் போன்றது என்றும் சொல்லலாம்.

## ஆழ்நிலை தியானத்தின் விளைவுகள்

"ஆழ்நிலை தியானம் சிந்திக்க விடாமல் மன வலிமையைக் குறைக்கிறது. கிழக்கு நாடுகளில் அதிகமான தியான நிலைகள் வழக்கத்தில் இருப்பதினால் தியானம் சம்பந்தப்பட்ட எல்லாவற்றிலும் இதன் விளைவைக் காணலாம். ஆவிக்குரிய வாழ்வில் இது சோர்வு ஏற்படுத்தும். இதனால் சத்தியத்தை அறிந்து கொள்ளக் கூடிய தன்மையை அது இழக்கச் செய்யும். ஆழ்நிலை தியான இயக்கம் செய்கின்ற பெரிய ஆபத்தான காரியம் இதுவே.

இந்த ஆபத்து எப்படி வருகிறதென்றால், மனதை தியானத்தில் வைத்து, உதடுகளினால் இடைவிடாமல் ஒரு குறிப்பிட்ட மந்திரத்தை உச்சரிக்கச் செய்வதினால் இது முடிவில் பேய்த்தனத்திற்கடுத்த நிலைக்குக் கொண்டு செல்லும். மந்திரத்தை உச்சரிக்கிறவர் அதன் பொருள் என்னவென்று தெரியாமலேயே இடைவிடாமல் தன் உதடுகளினால் உச்சரிக்கிறார். அதே சமயத்தில் தன் மனதை சிந்திக்க விடாமல் கட்டுப்படுத்துகிறார். அது புத்தி நரம்புகளை பலவீனப்படுத்த, முடிவில் பைத்திய நிலையே ஏற்படும்.

மகரிஷி சொல்லுவது என்னவெனில் :

மறு உலகத்தில் உள்ள தேவர்களிடம் அப்படி உச்சரிப்பது ஒரு விளைவை ஏற்படுத்தும்" என்பதே ( Ibid Page 140) என்ன விளைவு என்பதை விவரிக்க வில்லை.

கடைசி நிலையாகிய ஏழாவது நிலையில் தன்னையே கடவுளாக அவன் நினைக்கிறான். மகரிஷி தன்னுடைய புத்தகத்தில், நாம் யாவரும் நூறு சதவிகிதம் தெய்வாம்ச முடையவர்களே! ஆனாலும் நாம் தெய்வாம்சமுடையவர்கள் என்று அறியாமல் இருக்கிறோம் என்று எழுதுகிறார். (Maharishi Mahesh Yogi - Meditations of Maharishi Pages 177, 178)

ஆழ்நிலை தியானத்தின் மூலமாகவே இந்த நிலையை அடைய இயலும் என்பது மகரிஷியின் கருத்து.

இது எதை நினைவு படுத்துகிறதென்றால், நான் வானத்திற்கு ஏறுவேன், தேவனுக்கு ஒப்பாவேன் என்றும் இருதயத்தில் மேன்மை கொண்டு நான் தேவன் என்றும் சொன்ன தள்ளப்பட்ட தூதனாகிய பிசாசானவனை ஞாபகப்படுத்துகிறது. (ஏசாயா **14:14:** எசேக்கியல் **28:12-15**)

நானே கடவுள் என்று நினைப்பதற்கு ஆழ்நிலை தியானம் அல்லது யோக நிலை தேவையா? என்பது ஆய்வுக்குரிய கருத்தாகும்.

குருவைக்குறித்ததான சித்தர்களின் பாடல்கள் சிந்தனைக்கு ஏற்றவைகள். இவ்வித பாடல்கள் அல்லது செய்யுட்கள் பள்ளிக்கூடப் பாடப்புத்தகங்களில் காணப்படாதது கவலைக் குறியதாக உள்ளது. மாணவர்கள் சற்குருவை அறிந்துகொள்ள இப்பாடல்களை மிகவும் உதவும். பாம்பாட்டிச் சித்தர் என்பவர் தனது பாடலில் "குரு வணக்கம்" என்ற பகுதியில் குருவினது சிறப்பு குறித்து நன்றாக விளக்கி எழுதியுள்ளார்.

மனுக்குலத்தை வஞ்சித்த பாம்பை ஆடு பாம்பே என்றழைத்து அந்தப் பாம்பாகிய சாத்தானை குருவின் பாதத்தடியில் விழுந்து தொழவைக்கிறார்.

பாம்பாட்டிச் சித்தரின் குரு வணக்கம்.

காற்று உடல் பொருள் ஆவி தத்தமாகவே
தானம் வாங்கி நின்ற எங்கள் சற்குருவினைப்
போற்றி மனம் வாக்குக்காயம் முன்றும் பொருந்தப்
புக்ழ்ந்து புகழ்ந்து நின்று ஆடு பாம்பே !

2. பொய் மதங்கள் போதனை செய் பொய்க் குருக்களைப்
புத்தி சொல்லி நன்னெறியில் போக விடுக்கும்
மெய்ம் மதந்தான் இன்ன தென்று மேவ விளம்பும்
மெய்க் குருவின் பாதம் போற்றி ஆடு பாம்பே !

3. வேதப் பொருள் இன்னதென்றும் வேதம்கடந்த
மெய்ப் பொருளைக் கண்டு மனம் மேவி விரும்பிப்
போதப் பொருள் இன்னதென்றும் போதனை செய்யும்
பூரண சற்குரு தாள் கண்டு ஆடு பாம்பே !

4. உள்ளங்கையிற் கனிபோல உள்ள பொருளை
உண்மையுடன் காட்டவல்ல உண்மைக் குருவைக்
கள்ள மனந் தன்னைத் தள்ளிக் கண்டு கொண்டன்பாய்க்
களித்துக் களித்து நின்று ஆடு பாம்பே!

5. அங்கையிற் கண்ணடி போல ஆதி வஸ்துவை
அறிவிக்கும் எங்கள் உயிரான குருவைச்
சங்கையறச் சாந்ததமும் தாழ்ந்து பணிந்தே
தமனிப் படம் எடுத்து ஆடு பாம்பே!

6. காயம் நிலை அழிவைக் கண்டு கொண்டபின்
கற்பு நிலை உள்ளிற் கொண்டு எக்காலமும் வாழும்
தூய நிலை கண்ட பரிசுத்த குருவின்
துணையடி தொழுது நின்று ஆடு பாம்பே

7. கூடு விட்டுக் கூடு பாயும் கொள்கையுடைய
குருவின் வல்லடம் எவர் கூற வல்லவர்?
வீடு பெறும் வகையை மேன்மேலும் காட்டும்
மெய்க் குருவைப் பணிந்து நின்று ஆடு பாம்பே!

8. அட்டத்திக்கும் அண்ட வெளியான இடமும்
அடக்கிய குளிகையோடு ஆடி விரைவாய்
வட்டமிட்டு வலம் வரும் வல்ல குருவின்
மலரடி தஞ்சம் என்று ஆடு பாம்பே!

9. கற்பகாலம் கடந்த ஆதி கர்த்தாவோடும்
கடம் அழியாது வாழும் காரணக் குரு
பொற்பதமே தஞ்சமென்று போற்றுதல் செய்து
பூரணச் சிந்தையோடு ஆடு பாம்பே!

10. வச்சிரத்திற்கோர் பழுது வாய்க்குமாயினும்
வல்லுடம்புக் கொரு குறை வாய்த்திடாது
மெச்சு கடமுள்ள எங்கள் வேத குருவின்
மெல்லடி துதித்து நின்று ஆடு பாம்பே!

1. உடல், பொருள், ஆவி ஆகிய யாவையும் தத்தம் செய்து அதை நமக்காகத் தானமாய் தந்திட்ட சற்குருவை, மனம் வாக்கு காயம் மூன்றும் பொருந்திய ஒரே நிலையில் போற்றிப் புகழ்ந்து பாடவேண்டுமாம்.

2. பொய் குருக்கள் பொய் மதங்களைப் பரப்புகிறார்கள். அவர்களுக்குப் புத்தி சொல்லி இது தான் மெய்மதம் என்று விளங்க வைக்கும் குருவின் பாதம் போற்றி ஆடுபாம்பே என்கிறார்.

3. வேதப்பொருள், வேதம் கடந்த மெய்ப் பொருள், போதனை செய்யும் பொருள் ஆகியவை இன்னது என்று சொல்லித் தருகின்ற பூரண சற்குருவின் பாதங்களைக் கண்டு ஆடு பாம்பே என்கிறார்.

4. கள்ளம் நிறைந்த உள்ளத்தைத் தள்ளி வைத்து, உள்ளங்கையில் உள்ள கனி எப்படி நமக்கு நன்கு தெரியுமோ, அப்படி உண்மையுடன் விளக்கிக்காட்ட வல்ல உண்மைக் குருவைக் கண்டு கொண்டு களித்துக் களித்து ஆடு பாம்பே என்கிறார்.

5. கண்களால் கண்ணாடியில் பார்க்கும் போது நமது உருவம் எவ்வளவு தெளிவாய்க் காணப்படுமோ அப்படியாக ஆதிவஸ்துவாகிய பரம் பொருளை அறிவிக்கும் எங்கள் உயிரான குருவை எப்போதும் பணிந்து ஆடு பாம்பே என்கிறார்.

6. காயமாகிய இவ்வுடல் அழியும் நிலையில் உள்ளது. இதைக் கண்டு கொண்ட பின்பாவது உள்ளத்தில் தூய்மைக் கொண்டு, எக்காலமும் தூய நிலைக் கொண்ட பரிசுத்த குருவின் பாதங்களைத் தொழுது ஆடு பாம்பே என்கிறார்.

7. மனிதனின் உடம்பு ஒரு கூடு. அதற்குள்ளே இறைவனாகிய குரு இருக்கிறார். இப்படி ஒவ்வொருவர் உடம்பிலேயும் குருவாகிய இறைவன் இருந்து மனித ஆன்மாவை உணர்த்தி வீடாகிய பரலோகத்தை அடையும் வகையைக் காட்டுகின்ற குருவைப் பணிந்து ஆடு பாம்பே என்கிறார் இப்படிப்பட்ட குருவின் வல்லமையை யாரால் விவரித்துச் சொல்லக்கூடும்?

8. எல்லாவற்றையும் தனக்குள் கொண்ட இக்குருவை ஒரு குளிகை (மாத்திரை or Pill) என்கிறார். இவர் மனிதர்களைச் சுற்றி வட்டமிட்டு அவர்களை அபிஷேகிக்க ஓடி வருகிறார். அவருடைய பாதமே தஞ்சம் என்று ஆடு பாம்பே என்கிறார்.

9. கற்பகாலம் கடந்து, அதாவது ஒரு ஸ்திரியின் கற்பத்தில் பிறந்து வளர்ந்து இறந்து, ஆதி கர்த்தாவுடன் என்றும்

உடல் அழியாமல் அதாவது ஸ்தூல உடல் அழிந்தாலும் சூட்சும உடல் அழியாமல் வாழும் நிலைக்கு காரண குருவாய் இருக்கின்ற அவருடைய பொற்பாதமே தஞ்சமென்று, அவரைப் போற்றி பூரண சிந்தையுடன் அவர் நினைவாகவே வாழ்ந்து ஆடு பாம்பே என்கிறார்.

10. வஞ்சிரம் உறுதியானது. அதற்குக்கூடப் பழுது ஏற்படும். ஆனால் எங்கள் வேத குருவின் மெச்சத்தகுந்த உடம்புக்கு ஒரு குறையும் வாய்த்திடாது. அப்படிப்பட்ட குருவின் பாத அடிகளைத் துதித்து ஆடு பாம்பே என்கிறார்.

பாம்பாட்டிச் சித்தர் தமிழ் திராவிடர். ஆராய்ச்சியாளர்களின் கருத்துப்படி இவர் கி.பி. 18-ம் நூற்றாண்டில் வாழ்ந்திருக்க வேண்டும். இவர் காலத்தில் வாழ்ந்த மற்ற சித்தர்களும் 'குரு' வைப் போற்றியிருக்கிறார்கள். அதே நேரம் பொய் மதங்களையும், அவைகளைப் போதிக்கும் போலி குருக்களையும் எதிர்த்திருக்கிறார்கள். சிலை வணக்கத்தை எதிர்த்திருக்கிறார்கள். பார்பணியத்தை எதிர்த்திருக்கிறார்கள் புராணக்கதைகளைக் கட்டுக் கதைகள் என்றும் எழுதியிருக்கிறார்கள்.

கி.பி. 6-ம் நூற்றாண்டுத் திருமூலர் சித்தரிலிருந்து 19-ம் நூற்றாண்டுச் சித்தர்கள் வரை மதங்களையும், சாதிகளையும் சிலை வணக்கங்களையும், மூட நம்பிக்கைகளையும், புராணக் கட்டுக் கதைகளையும் எதிர்த்திருக்கிறார்கள். இவர்களைப் பித்தர்கள் என்று மதத்தலைவர்கள் கட்டிவிட்ட கதைகளை நம்பி, திராவிடத் தமிழ் இனம் இன்றும் ஆரிய இன மதங்களுக்கே அடிமைகளாய் வாழ்ந்து வருகிறார்கள்.

பாம்பாட்டிச் சித்தர் கூறும் குருவின் குணாதிசயங்களைச் சற்று சிந்திப்போம்.

மெய்குரு; உண்மைக்குரு; எங்கள் உயிரான குரு; பரிசுத்த குரு; வீடு பெறும் வகையைக் காட்டும் மெய்குரு; வல்லமை

நிறைந்த குரு : நித்ய ஜீவனை அடைந்து வாழும் வகைக்குக் காரணக்குரு: வேதகுரு.

மேற்கண்ட தகுதிகளை முழுவதும் பெற்ற குரு யாராவது இருக்கிறார்களா? இயேசுக் கிறிஸ்துவின் வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கினால் இத்தகுதிகள் யாவும் அவர் ஒருவருக்கே இருப்பதை அறியலாம்.

சமஸ்கிருதப் பாடல்கள், தமிழ்ப்பாடல்கள் சித்தர் பாடல்கள் போன்றவைகளில் குருவைக் குறித்துச் சொல்லப்படும் குணாதிசயங்கள் யாவும் இயேசுக்கிறிஸ்து ஒருவருக்கே பொருந்துகிறது என்பது தெளிவு. சிலர் 'யோகா' என்னும் உடற் பயிற்சியின் மூலம் இறைவனை அடையலாம் என்கிறார்கள். சில மனித குருக்கள் 'யோகா'வைக் கடைப்பிடித்து அதைப் போதிக்கிறார்கள். சித்தர்களிலும் சிலர் யோகசித்தர் என்று அழைக்கப்படுகின்றனர்.

எனவே 'யோகா' என்பதைக்குறித்தும் சற்று அறிந்துக் கொள்வது நலம்.

## உண்மையான யோகா தேவனுடன் இணைக்கப்படுவது

யோகா என்ற வார்த்தையானது இறைவனுடன் இணைதல் என்ற பொருளுடையதாயினும் ஆழ்நிலை தியானம் இறைவனைவிட்டுப் பிரித்து விடுகிறது.

சாலோகம் என்பது சா + லோகம் ஆகும். இதில் ஆண்டவரை ஏற்றுக் கொள்கிறவன் தேவ வார்த்தையைக் கொண்டு தேவனுடைய வட்டத்திற்குள் தன்னை அனுமதிக்கிறான். புதிதாக இவ்வுலகில் பிறக்கிற ஒரு குழந்தையைப்போல விசுவாசியானவன் தேவனுடைய உலகில் பிறக்கிற அனுபவத்தை இது குறிக்கிறது. இப்பொழுது அவன் தேவனுமல்ல, பாவியும் அல்ல. தேவனுடைய ஆளுகையில் நிற்கிறான்.

இதைக்குறித்துத் திருமூலர் என்ற தமிழ் சித்தர் கூறுவது:

சலோகமாதி சரியாதி யிற் பெருஞ்
சாலோகஞ் சாமீபந் தங்குஞ் சரியையால்
மாலோகஞ் சேரில் வழியாகுஞ் சாருபம்
பாலோகம் இல்லாப் பரனுரு வாமே

பாவத்தில் வசிப்பவன் பாவ உலகை விட்டு பரனுடன் சேர்கின்றமையால் அவன் இவ்வுலகில் பரனுடைய வேடத்தைத் தாங்கி நிற்கிறான். ஆனால் அவன் இன்னும் பரனுடன் ஐக்கியமாகி விடவில்லை.

சாமீப்யம் என்பது தேவனுடன் அதிகமாய் நெருக்கி வாழும் அனுபவத்தைக் குறிக்கிறது. உலகத்தின் முடிவு பரியந்தம் சதா காலங்களிலும் நான் உன்னோடு இருக்கிறேன் என்று ஆண்டவர் சொன்ன அருள் வாக்கை அவருடன் நெருங்கிப் பழகும் அனுபவஸ்தர்கள் மட்டுமே உணர முடியும்.

இதைக் குறித்துத் திருமூலர் சொல்லுவது என்னவெனில்:

பாசம் பசுவானதாகும் இச் சாலோகம்
பாசம் மருளானதாகும் இச் சாமீபம்
பாசஞ் சிரமான தாகும் இச் சாரூபம்
பாசங் கரைபதிசாயுச் சியமே

பாசம் அருளானதாகும் இச்சாமீபம் என்பதால் இறைவனுடைய பிள்ளையாய் இறைவனுடன் சாலோக அனுபவத்தில் வந்துவிட்டபடியினால், சாமீபத்தில் இன்னும் அதிகமாய் இறைவனுடன் நெருங்கி வாழ்கிறோம். இந்நிலையில் பாசமாகிய பாவம் நம்மைப் பற்றாது அதே நேரத்தில் இறைவனின் அருள் நமக்குக் கிடைக்கின்றது என்கிறார்.

சாருப்ய என்பது சா+ருப என்பதாகும். இந்நிலையில் நாம் மாமிசத்தில் வாழ்ந்தாலும் இயேசுக் கிறிஸ்துவாகிய பலி செலுத்தப்பட்ட பிராஜா பதியின் மேல் உள்ள விசுவாசத்தினால்

பாவத்திற்கு மரித்தவர்களாகவும் பாவத்திற்கு மரித்து உயிர்த்தெழுந்த இயேசுவுடன் இணைக்கப்பட்டு வாழ்கின்ற அனுபவத்தைப் பெறுகிறோம்.

நீங்களும் உங்களைப்பாவத்திற்கு மரித்தவர்களாகவும் நம்முடைய காத்தராகிய இயேசுக் கிறிஸ்துவுக்குள் தேவனுக் கென்று பிழைத் திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள். *(ரோமர் 6:11)*

**அதைக் குறித்துத் திருமூலர் சொல்வது என்ன வெனில் :**

தங்கிய சாருபந் தானெட்டாம் யோக மாந்
தங்குஞ் சன்மார்க்கந் தனிலன்றிக் கைகூடா
அங்கத் துடல் சித்தி சாதன ராகுவர்
இங்கிவ ராக விழி வற்ற யோகமே

யோகத்தின் எட்டாவது நிலை சமாதி என்றழைக்கப்படும். அதாவது செத்த நிலை, அதே போல இறைவனுடன் சேர்ந்து வாழும் போது பாவ சரீரம் ஒழிந்து (பாவத்திற்கு மரித்து) அதே சரீரத்துடன் பாவமற்ற சரீரமாக இறைவனின் உருவம் பெற்றுவாழ்வார் என்கிறார்.

கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டேன் ஆயினும் பிழைத்திருக்கிறேன். இனி நான் அல்ல, கிறிஸ்துவே என்ற நிலையே சாருப நிலை.

சாயூஜ்ய என்பது சா + யூஜ் என்பதாகும். இந்த நான்காவது நிலையே யோக நிலை, இதில் விசுவாசியானவன் தேவனுடன் பூரண ஐக்கியம் கொள்ளுகிறான்.

இதைக் குறித்து ஓர் அனுபவத்தைப் பவுல் என்ற தேவ மனுஷன் சொல்லும் போது, அவன் தேவனுக்குள்ளாய் மூழ்கி ஒன்றரக் கலந்துவிட்ட அனுபவத்தைச் சொல்லுகிறதை I கொரிந்தியர் 12 : 2-4 வரையிலுள்ள வசனங்களினால் அறியலாம்.

புருஷன் என்ற அந்த இயேசுவைச் சொந்த குருவா ஏற்றுக் கொண்டு பின்பற்றி நடக்கும் போது, இறைவன் உங்களுக்குள் கிரியை செய்ய ஆரம்பிக்கிறார். தேவனாகிய கர்த்தர் உங்களைக் கிறிஸ்து இயேசுக்குள்ளாக அபிஷேகித்து முத்திரை போடுகிறார். இயேசுக் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும், அந்த நாளிலிருந்தே இக்கிரியை ஆரம்பமாகிறது. எனவே மனிதன் தன்னுடைய சொந்த சரீரத்திலுள்ள புலன்களுடன் கூட இயேசுவும் உடன் இருக்கிறதை உணருகிறான். தன்னுடன் இருக்கும் இந்த நிலையை உணரக்கூடாத அக்காலத்து முனிவர்கள் இந்நிலைக்கு அவ்யக்தா (வெளிப்படாத) என்று பெயர் வைத்தனர். இப்பொழுது, கிறிஸ்து இயேசுவால் அது வெளிப்படுத்தப்பட்டு விட்டபடியினால் இந்நிலையை கிறிஸ்துவாகிய புருஷனின் சாயல் என்று அழைக்கலாம்.

**இதைக் குறித்துத் திருமூலர் சொல்லுவது என்னவெனில் :**

சாயுச் சியஞ்சாக் கிராதிதஞ் சாருதல்
சாயுச் சியமுப சாந்தத்துத் தங்குதல்
சாயுச் சியஞ்சிவ மாதல் முடிவிலாச்
சாயுச் சியமனத் தானந்த சத்தியே

கடவுளுடன் இரண்டறக் கலந்து விட்ட நிலையில் தான் மனிதன் என்ற நினைவு இருந்தாலும் தன்னை மறந்து, இறைவனுடன் இருக்கிற நிலையை அனுபவிப்பதையே சாக்கிராதீதம் என்கிறார். இப்படிப்பட்ட நிலையில் அவன் உபசாந்தனாகக் காணப்படுவான். உபசாந்தம் என்பது விருப்பு வெறுப்பற்றநிலை. வாழ்ந்திருக்கவும் தாழ்ந்திருக்கவும், எல்லா நிலையிலும் மனோ ரம்மியமாயிருக்கவும் கற்றுக் கொள்கிற நிலையை உபசந்தம் என்று சொல்லுவார்கள். இப்படிப்பட்ட இரண்டு நிலைகளையும் ஒருவன் அடையும் போது அது அவனுக்கு எல்லையில்லாத மகிழ்ச்சியைத் தருகிறது. இதுவே சாயுச்சியம் ஆகும்.

காதோபநிஷத்தின் 3-ம் அதிகாரம் 10, 11 ஆகிய வசனங்களிலும் 6-ம் அதிகாரம் 7,8 ஆகிய வசனங்களிலும் உள்ளவைகளை மீண்டும்' ஒருமுறை நமது ஞாபகத்திற்குக் கொண்டு வருவது நல்லது.

பூமியில் வாழ்கின்ற மனிதாத்மா நித்ய ஜீவனை அடைவதற்காக தன்னுடைய புலன்களின் மூலமாய் அழிவில்லாத தேவனாகிய புருஷனை அறிதல் வேண்டும் புலன்களுக்கு ஓர் அளவு மட்டுமே அறியக்கூடிய தன்மைகள் இருக்கிறபடியினால் தன்னிலும் அனுபவமுள்ள அல்லது உணர்வுகளைக் காண்பிக்கக் கூடிய (பார்ப்பது, கேட்பது) அவயவங்களின் உதவி தேவைப்படுகிறது. எனவே, இரட்சிப்பு அல்லது முக்தி என்ற அனுபவத்தினால் புருஷனை அறிய வேண்டும். புத்தி சித்தம் ஆகியவைகளின் மூலமாகவே பார்க்கவும் கேட்கவும் முடிகிறபடியினால் இவை அந்த அவயவங்களைக் காட்டிலும் மேலானவை. புத்தியும் பரலோகக் காரியங்களை விளங்கிக் கொள்ளும் அளவுக்கு மேலானது அல்ல. எனவே புத்தியானது ஞானத்தின் வழிநடத்துதலின்படி புருஷனுக்கு ஒப்புக் கொடுத்து விடுகிறபடியினால் ஞானம் புத்தியை விட மேலானது. ஆத்மாவானது ஞானத்திலும் மேலானதாகையால் ஞானம் ஆத்மாவாலன்றி பரம ஞானத்தை அறிய இயலாது. ஆனால் எஜமான் இல்லாமல் ஆத்மா கிரியை நடப்பிக்க இயலாது. அப்படியானால் ஆத்மாவின் எஜமான் யார்? அதுவே தேவசாயலான மனுஷன் என்கிறோம். இக்காலத்தில் வெளிப்பட்டது போல இக்காரியம் அக்காலத்தில் வெளிப்படுத்தப்படவில்லை. தேவ சாயலான மனுஷனுக்கு மேலானவர் ஒருவருமில்லை. இவருக்குச் சமானமானவரும் ஒருவருமில்லை. இவரே மேலான வழி. இவரே உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் அடைய வேண்டிய இலக்கு. நித்ய ஜீவனைப் பெற விரும்புகிறவர்கள் மனுஷ குமாரனும் புருஷனுமாகிய இயேசுக் கிறிஸ்துவுக்கு தன்னை ஒப்புக்

கொடுப்பதைத் தவிர வேறு வழி இல்லை. இவரை ஏற்றுக் கொள்கிறவனும் விசுவாசிக்கிறவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான். மரித்தாலும் பிழைப்பான் (யோவான் 11:25. 26)

இரட்சிப்பின் முழு நிலைமையை அடைய இயேசுக்கிறிஸ்துவாகிய தேவபுருஷனை ஏற்றுக் கொள்ள வேண்டும். பைபிளும் உபநிடதங்களும் சொல்லுவது என்னவெனில்: எழுந்திரு அல்லது உத்திஷ்ததா ஜாக்ரத கடவுளுடைய வார்த்தையைக் கேள் என்பதே!

யாக்கோபு என்பவர் சொல்கிறபடி உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ள தாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக் கொள்ளுங்கள். (யாக்கோபு 1:21)

இதுவே, வேதங்களின் படி சொல்லப்பட்ட முதலாவது படியாகிய ஸ்ரவன (கேட்பது)

எபிரெயர் 2-ம் அதிகாரம் முதல் வசனம் சொல்லுகிறது.

"நாம் கேட்டவைகளை விட்டு விலகாத படிக்கு அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனிக்க வேண்டும்.

இது, வேதங்களின்படிச் சொல்லப்பட்ட மனன (கேட்டவைகளை விட்டுவிடாதபடி நிலை நிறுத்திக் கொள்ளுதல்) என்பது

எபிரெயர் 3-ம் அதிகாரம் முதல் வசனம் சொல்லுகிறபடி

"பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே....... இயேசுவைக் கவனித்துப் பாருங்கள்."

இதுவே, வேதங்கள் சொல்லுகின்ற மூன்றாவது நிலையாகிய நிதித்யாசன (வேதவசனங்களை இடைவிடாமல் தியானித்தலும் இயேசுவில் நிலைத் திருத்தலும்) ஆகும்.

கடைசியாக சகோதரரே!

உண்மையுள்ளவைகள் எவைகளோ
ஒழுக்க முள்ளவைகள் எவைகளோ
நீதியுள்ளவைகள் எவைகளோ
கற்புள்ள வைகள் எவைகளோ
அன்புள்ள வைகள் எவைகளோ
நற்கீர்த்தியுள்ள வைகள் எவைகளோ
புண்ணியம் எதுவோ
புகழ் எதுவோ

அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள். நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகள் எவைகளோ அவைகளையே செய்யுங்கள். அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடு இருப்பார். (பிலிப்பியர் 4 : 8, 9)

இதுவே உண்மையான யோகா, இதிலே நாம் தேவனுடைய சுபாவங்களைப் பெற்று என்றென்றும் தேவனுடன் கூட நிலைத்திருக்கவும் நித்ய ஜீவனைப் பெற்றுக் கொள்ளவும் வழியுண்டு.

ஆழ்நிலை தியானம் நமது சிந்தனையை வெளியேற்றி கனவுலகில் கொண்டு போய் முடிவில் நானே கடவுள் என்று ஆணவத்தில் சொல்ல வைத்து நித்ய நரகத்தில் தள்ளும்.

உண்மையான யோகாவோ நமது சிந்தையை கிறிஸ்து இயேசுவின் சிந்தையாக மாற்றி நித்ய பேரின்ப இராஜ்ஜியத்திற்குக் கொண்டு போய் சேர்க்கும்.

எப்படிப்பட்ட யோகாவை நீங்கள் விரும்புவீர்கள்?

## 4 பக்தி மார்க்கம் :

பக்தி என்பது விசுவாசம் அல்லது பூஜை என்று பொருள்படும். இந்து ஞானிகளில் இவ்வார்த்தைக்கு அன்பு

என்ற தவறான விளக்கம் கொடுக்கிறார்கள். சில ஞானிகள் பக்தியை இரட்சிப்புக்கு நான்காவது வழி என்று சொல்லுகிறார்கள். ஆனால் இது நான்காவது வழியாக இல்லாமல் வழியின் ஒரு சிறுபாகமாக மட்டும் இருக்கிறதைக் காணலாம்.

இரட்சகனாகிய இயேசுக் கிறிஸ்துவாகிய புருஷன் மீது அன்பு வைத்து பக்தி செலுத்தும் போது, நாம் அவரை அறிகிறோம், பின்பு அவரில் தொடர்ந்து அன்பு செலுத்தி அவருக்கு சேவையும் செய்கிறோம்.

நாம் சட்ட திட்டங்களினால் நற்கிரியை செய்யாமல் புருஷனாகிய இயேசு நமக்குக் காட்டிய அன்பை நினைத்து நம்மையறியாமலேயே அவருக்காக நற்கிரியைகளைச் செய்ய ஆரம்பிக்கிறோம். மரணமில்லாப் பெருவாழ்வுக்கான வழி இதுவே!

இந்நான்கு வழிகளும் ஒரே வழியாம்

வேதங்களும் உபநிடதங்களும் இரட்சிப்புக்கான நான்கு வழிகளைச் சொல்லவில்லை. இரட்சிப்பின் வழியில் இவைகள் நான்கு விதமான தோற்றமளிக்கின்றன.

ஞானம் அவரை அறிந்து கொள்ள
கர்மம் விசுவாசத்தைக் காண்பிக்க
யோகம் அவரில் நிலைத் திருக்க
பக்தி அவரைப் பூஜித்து விசுவாசமாயிருக்க

இவை நான்கும் சேர்ந்து இரட்சிப்பைப் பூரணப் படுத்துகிறது.

பைபிளில் இயேசு சொன்னது என்னவெனில் :

ஒன்றான மெய்த் தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுக் கிறிஸ்துவையும் அறிவதே நித்ய ஜீவன்" (யோவான் 17:3)

நானே வழியும் சத்யமும் ஜீவனுமாயிருக்கிறேன்.
என்னாலேயல்லாமல் ஒருவனும்
பிதாவினிடத்திலே வரான். (யோவான் 14 : 6)

**பேதுரு அப்போஸ்தலர் சொன்னது :**

இயேசு வாலன்றி வேறொரு வராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும் படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக் குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை. (அப்போஸ்தலர் 4:12)

**பவுல் அப்போஸ்தலர் சொன்னது :**

தேவன் ஒருவரே! தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே! எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக் கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே! இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கி வருகிறது. (1 தீமோத்தேயு 2 : 5, 6)

இயேசுக் கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர் - உலகத்தின் ஒளி - தேவனுடைய தற்சொரூபம் - ஞானம் - நீதி - மீட்பு - பரிசுத்தம் - ஆமென் - ஆமென்!

## முடிவுரை

இறைவன் குருவாக உலகில் வந்து உபதேசித்தாலன்றி மனிதன் பிறவிப்பயனடைய இயலாது என்பது கண்கூடு.

சிவஞான சித்தியார் 8 : 6 : 28ல்

"சூரிய காந்தக் கல்லிடத்தே செய்யச்
சுடர் தோன்றிடச் சோதி தோன்றுமாப் போல்
ஆரியனாம் ஆசான் வந்து அருளால் தோன்ற
அடிஞானம் ஆன்மாவில் தோன்றும்"

என்றார். இப்பாடலின் கருத்து என்னவென்றால், பிரகாசமுள்ள சூரியன் காந்தக் கல்லில்பட்டால் அதினின்றும் சோதி பிரதிபிம்பித்து வருவது போல, குருவாகிய இறைவன் தமது அருளால் தன்னை நமக்குக் காட்டும் போது, ஞானம் நமது ஆன்மாவின் அடியிலிருந்து பிரதிபிம்பவிக்கும் என்பதே.

சிவஞான போதம் 8ம் சூத்திரம் சொல்லுவது என்னவெனில்:

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரண் கழல் செலுமே"

இச் சூத்திரத்திற்கு டாக்டர் மு. தெய்வநாயகம் அவர்களின் கருத்து என்னவெனில், நமக்கு முதல்வனாகிய இறைவன் ஆன்மாவை நோக்கி, 'நீ மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புல இச்சைகளாகிய வேடருடன் வளர்ந்து, இப்பொழுது இருக்கும் இழி நிலையை அடைந்தாய். நீ யார் என்பதையும் எங்கிருந்து வந்தாய் என்பதையும் அறியாது மயங்கி விட்டாய்' என்று குருவாக உலகில் தோன்றி, ஆன்மாவை மீட்பதற்காகத் தான் ஏற்றுக் கொள்ளும் துன்பமாகிய தவத்தினால், ஆன்மாவிற்கு உண்மையை உணர்த்திக்காட்ட, ஆன்மாவானது

தன் பாவ நிலையை விட்டுத் தனக்கும் இறைவனுக்கும் இடையேயுள்ள பாவமாகிய பிரிவினை நீக்கப்பட்டு, மீட்கப்பட்டமையால் பாவத்தை அரிந்தெடுப்பவனாகிய இறைவனின் திருவடியைச் சென்று அடையும்.

தவத்தினில் உணர்த்தவிட்டு என்பதின் விளக்கவுரை : விட்டது ஆன்மா, உணர்த்தியது இறைவன். தவம் - இது இறைவனுடைய தவமா? ஆன்மாவின் தவமா? என்ற ஐயம் சிலருக்கு ஏற்படலாம். விட்டது ஆன்மா என்பதில் அவர்களுக்கு ஐயமில்லை. விட்டது எதை? மலத்தை, விடுவதற்கு முன் ஆன்மா மலத்தைப் பற்றியிருந்ததா? ஆம் அந்நிலையில்சகச மலத்திலுள்ள ஆன்மா தன்னையும், இறைவனையும் உணர இயலுமா? இயலாது என்பது, சகச மலத்து உணராது, என்பதின் மூலம் விளங்கிக் கொள்ளலாம். தன்னையும் இறைவனையும் உணராத ஆன்மா எவ்வாறு தவம் செய்யப் புறப்படும்? ஆகவே தவம் என்பது ஆன்மாவின் தவம் அன்று. 'தவத்தில் தலைவ-ராகிய' இறைவனுடைய தவமேயாகும் (மெய் கண்டார் அருளிய சிவஞான போதம் விளக்கவுரை - டாக்டர் மு. தெய்வநாயகம், எம்.ஏ.பி.எச்.டி., மெய்ப் பொருள் பதிப்பகம் - பக்கம் 46)

மேலே கண்ட இக்கருத்து சிவஞான சித்தியார் சுபக்கம் 253வது பாடலில் விவரிக்கப்பட்டுள்ளது.

"மன்னவன் தன் மகன் வேடரிடத்தே தங்கி
வளர்ந்து அவனையறியாது மயங்கி நிற்பப்
பின்னவனும் என்மகன் நீயென்று அவரின் பிரித்துப்
பெருமையொடு தானாக்கிப் பேணுமாப் போல்
துன்னிய ஐம்புல வேடர் சுழலில் பட்டுத்
துணைவனையும் அறியாது துயருறும் தொல்லுயிரை
மன்னும் அருள் குருவாகி வந்து அவரின் நீக்கி
மலம் அகற்றித் தானாக்கி மலரடி கீழ் வைப்பான்"

மன்னனுடைய மகன் பிறப்பிலிருந்தே வேடர்கள் மத்தியில் வளர்ந்து வந்தபடியினால் தான் யார் என்பதை அறியாமல் வேடனாகவே காட்டில் வளர்ந்தான். இதையறிந்த மன்னன், ஒரு மன்னனாகக் காட்டுக்குள் சென்றால் வேடர்கள் தங்களை ஒளித்துக் கொள்வார்களென்றெண்ணி, தானும் ஒரு வேடனைப் போல் மாறுவேடமணிந்து, தன் மகனைச் சந்தித்து, அவனுக்கு அவன் யார் என்பதை விளங்க வைத்துத் தன்னுடன் சேர்த்துக் கொண்டான். அது போலப் பிறப்பிலிருந்தே சகச மலமாகிய தொடர்புள்ள பாவத்தினால் ஆன்மாவானது மெய் வாய் கண் மூக்குச் செவியென்ற ஐந்து வேடர்களுக்குள் அகப்பட்டு இறைவனை உணராமல் அயர்ந்து கிடக்கின்றது. இந்நிலையில் இறைவன் மனிதனைப் போல உலகில் வந்து குரு உபதேசம் செய்து, புலன்களாகிய பாவச் சிறையினின்றும் ஆன்மாவை விடுவித்து பாவமாகிய மலத்தை அகற்றி, தன்னைப் போன்ற தெய்வீக நிலையைத் தந்து, தன் திருமலரடியில் சேர்த்துக் கொள்வான் என்பது மேற்கண்ட பாடலின் விளக்கமாகும். மேலும்,

ஞான நெறிக்கேற்ற குரு நண்ணரியச்சித்திமுத்தி
தானந் தருமந் தழைத்த குரு - மானமொடு
தாயெனவும் வந்தென்னைத் தந்த குரு என் சிந்தை
கோயி லென வாழும் குரு.

என்று தாயுமானவர் 82-ம் பாடல் சொல்லுகிறது. இப்பாடலில் கருத்து : குரு ஞான வழியைக் காட்டக் கூடியவர். பெறுதற்கரிய சித்திகளும் முத்திகளும், தானமும், தருமமும் தம்மிடத்தில் வைத்திருப்பவர். தாயைப் போல வந்து என்னை எனக்கே தந்த குரு. என் சிந்தையைக் கோயிலாகக் கொண்டு எனக்குள் வாழும் குரு என்பதாம்.

அகஸ்தியர் ஞானம் 30ல் 23-ம் பாடலில் :

"குவலயத்தில் தானுதித்துக் குருவாய் நின்று....."
என்று காணப்படுகிறது.

தணிக்கைப் புராணத்தில் உள்ள ஒரு செய்யுளில் :

தனக்குத் தானே மகனாகிய தத்துவம்
தனக்குத் தானே ஒரு தாவரங்குருவுமாய்
தனக்குத் தானே அருள் தத்துவம் கேட்டதும்
தனக்குத் தான் நிகரினான் தழங்கி நின்றாடினான்

என்று காணப்படுகிறது. இங்கே இறைவனுக்கு மகன் என்றில்லாமல் இறைவனே மகனாகக் காட்டப்படுகிறார். அவரே குருவாக வந்து தத்துவம் கேட்டு, தனக்கு யாரும் நிகரில்லாமல் அசைவாடுகிறான் என்று சொல்லப்படுகிறது.

பராபரக் கண்ணிமாலையில் :

"பந்தமெல்லாம் தீரப்பரஞ்சோதி நீ குருவாய்
வந்த வடிவை மறவேன் பராபரமே"

என்று காணப்படுகிறது. மனித ஆன்மாவைச் சுற்றிக் கொண்டிருக்கிற உலக பந்தங்களை நீக்க இறைவனாகிய பராபரன் குரு வடிவ மெடுத்து வந்ததை மறக்க இயலாது என்று பக்தன் பாடிப் பரவசமடைகிறான்.

மாணிக்க வாசகரும் :

அருபரத் தொருபரன் அவனியில் வந்து
குருபரனாகி அருளிய பெருமையைச்
சிறுமை யென்றெண்ணி இகழாதே....... என்கிறார்.

அகஸ்தியர் ஞானம் 30ல்

சற்குருவைத் தரிசித்துப் பாதம் போற்றி ..... என்கிறார்.

"குருவுருவங் கொண்டு இக் குவலயத்தில் தோன்றிப் பரவிருள் நீக்கும் பரன்"

என்பது அனுபூதிப் பாடல்களில் வரும் சில வரிகளாகும்.

மேற்கண்ட பாடல்களினூடாக நாம் அறியப் பெறுவது யாதெனில் :

குரு ஆன்மாவுக்குத் தமது அருளால் ஞானத்தைத் தருவார்.

குரு தவத்தின் தலைவனாக வந்து துன்பமேற்று ஆன்மாவை பாவத்தளையிலிருந்து விடுவிப்பார்.

குரு இறைவனாயிருந்தும் மனித உருவில் வந்து மனித பாவங்களை நீக்கி மனித ஆன்மாவைத் தன்னுடன் சேர்த்துக் கொள்ளுவார்.

குரு உலகில் சகல வல்லமைகளோடும் வந்து மனிதனை மீட்டு அவனை அவனுக்கே அருளுவார்.

குரு இறைவனாகவும் மகனாகவும் தோன்றுவார்

குரு உலக பந்தங்கிளிலிருந்து மனிதனை மீட்கும் சோதி

குரு உலகில் தோன்றி பாவமாகிய இருளை நீக்குவார்.

இப்படிப்பட்ட அருங்குணங்களைப் பெற்ற ஒரே ஒரு குரு இறைவனாகவே இருக்க வேண்டும். சகசமலமாகிய தொடர்புடைய பாவத்தில் பிறந்த எந்த மனிதனும் 'குரு'வாக இருக்க இயலாது. இவைகளைக் குறித்த தமிழ், சமஸ்கிருதப் பாடல்களை ஏற்கெனவே படித்தோம். அப்படியானால் குருரேவ ஹரி (இறைவனே குரு) என்ற வாசகத்திற்கிணங்க இறைவனாகிய குரு அல்லது குருவாகிய இறைவன் யார்?

பரத்திலிருந்து இறங்கி வந்த குரு
திருமந்திரம் சொல்லும் குரு
பரிசுத்த குரு
ஞான குரு
பரம குரு

பரத்திலிருந்து இறங்கி சாதாரண மனிதன் போல் தோற்றமளித்த குரு.

மேற்கண்ட இவ்வார்த்தைகளுக்கேற்ற 'குரு' **இயேசுக் கிறிஸ்து என்னும் இறைமகனுக்கே** பொருந்தும் என்பது எனது தாழ்மையான எண்ணம். மேற்சொன்ன வேத இலக்கியங்களுள் காணப்படும் சகல குணங்களையும் வல்லமைகளையும் உடைய வேறொரு 'குரு' இருப்பாரானால் அப்படிப்பட்ட வரை ஏற்றுக் கொள்ளத் தயங்கேன். அப்படி இல்லாத பட்சத்தில் இயேசுக் கிறிஸ்துவையே உங்கள் 'குரு'வாக ஏற்றுக் கொண்டு அவரால் போதிக்கப்பட்டு உய்வடைந்து வாழ்வில் வளம் பெற வாழ்வாங்கு வாழ்த்துகிறேன்.

"சரியையின் தொழிலினாலும் நற்கிரியையயினும் யோகம்
புரிதரும் முயற்சியானும் பொருந்தொணா தென்பர் மேலோர்
உரிய தேசிகன் உரைக்கும் ஒரு மொழி உண்மையாலே
அரிய மெஞ்ஞான வீடு இங்கடைவது திண்ணம் தானே"

திருமூலர்

ஞானிகளாகிய மேலோர், சரியை (தொழில்) நற்கிரியைகள், யோகம் செய்தல் ஆகியவைகள் வீடு பெறுதலுக்கு பொருந்தாது என்பர் : உரிய தேசிகனாகிய குருநாதன் சொல்லும் ஒரே மொழியின் உண்மையாலேயே அரிய மெஞ்ஞான வீட்டை (பரலோக வாழ்வின் இன்பத்தை) இங்கேயே அடைவது திண்ணம் என்கிறார் திருமூலர் சித்தர்.

உரிய தேசிகன் யார் என்பதை இப்புத்தகத்தைக் கருத்துடன் வாசித்தோர் உணர்ந்திருப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் ஆசி கூறி நிற்கின்றேன்.

வணக்கம்

அன்புடன்

இயேசுக் கிறிஸ்துவின் திருப்பணியில்

**SADHU CHELLAPPA**
Post Box No. 8659,
Chennai - 600 041.

# அறிவித்தல்

எங்களிடம் சாது செல்லப்பா அவர்களின் புத்தகங்கள், ஒலித் தட்டுகள் ஆகியவைகள் கிடைக்கும். விபரங்களுக்கு எழுதிக் கேளுங்கள்.

எங்களுடைய மாதாந்திரப் பத்திரிக்கையான சுத்திகரிக்கும் அக்னி பிரதிக்கு எழுதிக்கேளுங்கள் ஆண்டு சந்தா ரூபாய்.300/–

எங்களுடைய புத்தகங்கள், ஒலித் தட்டுகள் (CD, VCD, DVD) ஆகியவைகள் வெளியில் எங்கும் விற்கப்படுவதில்லை. அப்படி விற்கப்பட்டால் அவை போலியானவைகள், எங்கள் அனுமதியின்றி வெளியிடப்படுபவைகள் என்பதை அறியத்தருகிறோம்.

நன்றி!


முகவரி :

**சாது செல்லப்பா**
P.O. Box No. : 8659
சென்னை – 600041.